# விடுதிப் புஷ்பங்கள்

ராவ்பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் தமிழில் இயற்றப்பட்டது.

**இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ்நூல்கள் :—**

லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்கு, சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளி மணம், பேயல்ல பெண் மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்கிரமோர்வசி, முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், நாடக மேடை நினைவுகள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணிபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தை யிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவ தெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், பேசும் படக்காக்ஷி, இல்லறமும் துறவறமும், சபாபதி ஜமீன்தார், சபாபதி துவிபாஷி, சபாபதி துணுக்குகள் ; தீயின் சிறுதிவலை, சிவாலயங்கள், நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும், நான் குற்றவாளி, தமிழ்அன்னை பிறந்து வளர்ந்தகதை, பலவகைப் பூங்கொத்து சிவாலய உற்சவங்கள், சிவாலய சில்பங்கள், காலக் குறிப்புகள், மூன்று நகைச்சுவை, நாடகங்கள், 9 குட்டி நாடகங்கள், உத்தம பத்தினி முதலியன.

இரண்டாம் பதிப்பு. 2.50

காபிரைட்] 1959 [விலை [redacted]

என் தந்தை தாயர்

பம்மல் விஜயரங்க முதலியார்

பம்மல் மாணிக்கவேலு அம்மாள்

ஞாபகார்த்தமாக அச்சிடப் பட்டது.

# ஏமாந்த இரண்டு திருடர்கள்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| பக்காத் திருடன்<br>பலே திருடன் | } | இரண்டு திருடர்கள் |
| அப்பாசாமி முதலியார் | ... | ஒரு மிட்டாதார் |
| தாண்டவராயப் பிள்ளை | ... | ஓர் தலையாரி |

*தலையாரியின் இரண்டு ஆட்கள்*

---

## முதல் அங்கம்

---

### முதற் காட்சி

**இடம்:**—*பக்காத்திருடன் வீட்டில் ஓர் அறை.*

**காலம்:**—*காலை.*

**பக்காத் திருடனும், பலே திருடனும்,** *உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.*

**பலே.** அண்ணை,—அப்போ நாளைக்கி—காலமே எனக்கு—ஊருக்கு போவ—உத்தரவு கொடுக்கரைங்களா ?

**பக்.** இதுக்குள்ள என்ன தம்பி அவசரம்? இன்னம் ரெண்டு மூணு நாளு இருந்தாட்டு போவரது தானே ?

**பலே.** வந்து ஒரு வாரமாச்சு,—சும்மாயிருக்கிறது இண்ணை—பொழுது போவலே—நாளைக்கி காலமே போவ கொஞ்சம் உத்தரவு கொடுங்க—

**பக்.** இல்லே—தம்பி—உன் மனசுலே—என்னமோ யிருக்குது—சொல்லு ஒளிக்காதே—

**பலே.** இல்லே—அண்ணை—இந்த ஊருக்கு நான் வந்ததே—நம்போ தொழில்லே ஏதாவது—புதுசா கத்துகினு போவணு மிண்ணு ; ஒரு வாரமா பாக்கரேன்—நான் கத்து கிறத்துக்கு இங்கே ஒண்ணையும் காணோம்—நானு இங்கே யிருக்ரவங்களுக்குக் கத்துகொடுக்கணும் போலெ யிருக்குது ! —அத்தொட்டு என் ஊருக்கு திரும்பிப் போகலா மிண்ணு பாக்கறேன்.

**பக்.** இந்த ஊர்லே யிருக்கிற—நம்ப தொழிலாளிங்க கிட்ட இருந்து—கத்துக வெண்டியதெல்லாம்கத்துகுணுச்சா?

**பலே.** என்ன இங்கே யிருக்கவங்க கிட்ட இருந்து கத்துகிறது ? நான் வந்ததுமொதல் 12 சவரன் இடுப்பிலே சொருகிகினு இருக்கறேன். அத்தெ ஒருத்தனுவது தொட்டவனெ காணும் ! எங்க ஊர்லே இடுப்புலே சவரனெ சொருகிகினு—பக்கத்துக் கடைக்கி போயி ஏ்ரி மூட்டை வாங்கிகினு வர்ரத்துக்குள்ளோ—அது மாயமா போயிருக்கும். என்ன பிரயோஜனம் ? இந்த ஊர்லே ஒருத்தனுவது கெட்டிக்காரத் திருடனு காணும் ! பேர் மாத்திரம் திருட்டிலே பேர் போனது தெப்ப கொளத்தூரு !—இந்த ஊரு சாமி பேரு கூட திருட்டீஸ்வரனும் !

**பக்.** அப்படி சும்மா சொல்லிவிடாதே தம்பி ! நீ இடுப்புலே சொருகிகினு இருக்கரது நெஜமான சவரனுயிருந்தா—நீ இங்கே வந்தநாளே காணுமே போயிருக்கும்—இந்த ஊரிலே இருக்கிற திருடருங்கல்லாம், பித்தளெ சவரனெ திருடர தில்லே—பொன் சவரனுயிருந்தாதான் திருடுவாங்க—கக்கூஸ்லே போய் கன்னம் வைப்பானேன் அப்பா ?

**பலே.** அண்ணு !—இது உங்களுக்கு எப்படி தெரிஞ்சுது அண்ணு? எப்போ தெரிஞ்சுது அண்ணு !—

**பக்.** உன் இடுப்புலே இருக்கிற சவரன் முடிச்செ எடுத்துப் பாரும் தெரியும்.

**பலே.** [அதை அவிழ்த்துப் பார்த்து] இதென்னு காயிதம் ஒண்ணு இதிலே இருக்குதே !

**பக்.** அத்தெ படிச்சிபாரு தெரியும்.

**பலே.** [அதைப் பிரித்து வாசிக்கிறுன்] "தம்பி பலே திருடனுக்கு—இந்த ஊரில் இருப்பவர்களெல்லாம் பித்தளே யென்றும், பொன்னென்றும் தொட்டுப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொள்வார்கள். அத்தொட்டு இன்னொருதரம் வரும்போது, பொன் சவரனைக் கொண்டு வா, நீ முழிச்சு கினு இருக்கும் போதே, அதை திரு

டும் மார்க்கம்—உனக்கு தெரிவிக்கரேன்—இப்படிக்கு உன் தமயன்—பக்காத் திருடன்"—அண்ணு—இது வரைக்கும் உங்களே மரியாதைக்காக அண்ணு இண்ணு கூப்பிட்டுகினு இருந்தே—இனிமேலே உங்களே வாஸ்தவமா அண்ணுத்தே யிண்ணு கூட்பிடப்போரேன். —[அவன் கையைப் பிடித்துக்கொண்டு] அண்ணுத்தே, இது தான் உங்ககாலு—எப்படியாவது உங்க வித்தை யெல்லாம் எனக்கு கத்துக் கொடுத்து என்னெ கடைத்தேறப் பண்ணனும்.

**பக்.** அப்படியே ஆகட்டும் தம்பி—பயப்படாதே.

**பலே.** அண்ணுத்தே—மத்ததெல்லாம் அப்புறம் கத்துக் கொடுங்க— இப்போ—எந்த சமயத்லே என் இடுப்பிலே சொருகியிருந்ததே எடுத்துப் பாத்தைங்க? அத்தெ மாத்திரம் இப்பொ—மொதல்லே—சொல்லிடுங்க.

**பக்.** நீ வந்த மொதல் நாளுராத்திரி—எம்பக்கத்திலே உக்காந்து சாப்பிட்டுகினு இருந்தையே—அப்போ—

**பலே.** அப்போ—உங்க கை சாப்பிட்டுகினு இருந்துதே ?

**பக்.** சோத்துகை! பீச்சகை என்ன செய்துது இண்ணு உனக்கு தெரியாது! நம்பொ தொழில்லே ரெண்டு கையும் பழகி யிருக்கணும்—முக்கியமா பீச்சகை—எல்லாரும் அது ஒண்ணும் செய்யாது இண்ணு நெனைச்சிகிவாங்க !—அது தானே நமக்கு நல்லது.

**பலே.** அண்தே! இனி மேலே நீங்க எனக்கு அண்ணுத்தே யில்லா—அப்பா! உங்க, காலே வுட்டு இனி மேலே போவவே மாட்டேன்.—அண்ணு—இண்ணெ ராத்திரிக்கி எங்கே போகலாம்.

**பக்.** இந்த சில்லரே வேலேயெல்லாம் வேணும்—நான் சொல்ரத்தே கேளு—அதோ அந்த ஆத்துக் கப்பாலே தோப்பு தேரியுது பார்—அங்கே எலிமிச்சம் பட்டி இண்ணு ஒருகிராமம் இருக்குது, அங்கே ஒரு கெழவன் இருக்கரான் ஒரு ஊட்லே, அவன் ரொம்ப பணக்காரென் இண்ணு சொல்ராங்க—ரொம்பநாளா அவன்

ஊட்டலே திருடணும் இண்ணு பிரயத்னப்பட்டு பார்க்கறேன் முடியலே—என் ஒருத்தனாலே. நம்ப ரெண்டு பேருமா போய் அவன் கிட்ட ஏதாவது வேலைக்கி அமர்ந்து—சமயம் பார்த்து அவன் பெட்டியிலே வைச்சிருக்கிற ரூபாயெல்லாம் தபாய்ச்சிகினு வந்துடணும் அப்படி செய்தோம் இண்ணா—இந்த ஜன்மத்திலே நம்ப மறுபடியும்—திருடவேண்டியதில்லே.

**பலே,** அப்படியே, அண்ணா.

**பக்.** சாப்பாட்டுக்கு மேலே அவன் ஊட்டுக்குப் போகலாம்

**காட்சி முடிகிறது.**

---

## இரண்டாம் காட்சி

**இடம்**—ஆனூரில் **அப்பாசாமி முதலியார்,** வீட்டுத் தெருத்திண்ணை

**காலம்**—காலை

**பக்காத் திருடனும், பலே திருடனும்,** உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.

**பலே.** என்னா அண்ணா—மொதலியாரு என்னமோ பெட்டியிலே தூக்கிக்குனு உள்ளே போனாரே ?

**பக்.** என்னமோ தெரியலெ—அத்தெ ரகசியமா தெரிஞ்சு கொள்ளணும்—நேரா கேட்டா ஏதாவது சந்தேகப் படுவாரு.

**பலே.** ஆமாம், ஏதோ நகெ கிகெ யாட்ட மிருக்குது—பளுவாதாயிருக்கணும்—கொஞ்சம் கஷ்டப்பட்டு தான் தூக்கிகினு போனாரு.

**பக்.** அவருக்கு கஷ்டமென்னா ? ஆளெ நல்லா கவனிச்சையா ?—வயசு அறுவத்து நாலானாலும் முண்டா கிண்டா எல்லாம் என்னமா திரும்பியிருக்கிறது பார்த்தாயா ? சமயம் வந்தா நம்மெப் போலே நாலு பெயரை அடிச்சி போடுவாரு போலே யிருக்குது !

**பலே.** அது என்னமோ வாஸ்தவம் தான். அவருக்குத் தெரியாதெதான் அந்த அறைக்குள் கன்னம் வைக்கணும்—அந்த அறையிலே தான் இப்பொ கொண்டாந்த பெட்டியையும் கொண்டு போனபோலே யிருக்குது.

பக். அந்த அறைக்கு கன்னம் வைக்க முடியரதாயிருந்தா இத்தனி நாளு வைச்சிருக்க மாட்டேனு ?—அது கருங் கல் கட்டடண்டாப்பா ! பூட்டெ ஒடைக்க என்னாலே முடியலே—என்னமோ ஐப்ஸ் லாக்கம்—கெட்டெ பாராயாலே கூட ஒடைக்க முடியலே.

பலே. அப்போ அவர் தூங்கும் போது, சாவியே தபாய்ச்சிகினு, அறையே தெறந்துதான் எடுக்கணும்.

பக். ஆமாம் அப்புறம் அவர் முழிச்சிகினா—நப்போ சட்னி தான் !—அவர் இந்த வயசுலே கூட தினம் நூறு தண்டால் எடுக்கருருடா,

பலே. அப்போ என்னா செய்யரது அண்ணா ?

பக். பாக்கலாம்—அவர் கிட்ட ஏதாவது வேலைக்காரருங் களா அமரலாம். அப்புறம் ஏதாவது சமயம் பாக்க லாம்—அடடெ !—கப்சப்—அதோ வர்ராப் போலே யிருக்குது.

அப்பாசாமி முதலியார், உள்ளே யிருந்து வருகிறார்.

அ. [திண்ணைமீது உட்கார்ந்து] அப்பாடா !—என்னா, காலம் கெட்டுப் போயிருக்குது !

பக். என்ன தாதா சமாசாரம்,

அ. வேறே என்ன சமாசாரம் ? எல்லாம் திருடர் சமா சாரம் தான்—இந்த ஊர்லே திருடர் பயமதிகமாயி ருக்குது, நம்ப கையிலே இருக்கர கொஞ்சம் நகை நட்டெ யெல்லாம் பக்கத்தூரிலிருக்கும் நம்ப மச்சான் கிட்ட கொண்டு போய் வைக்கலாம் இண்ணு பாத்தா —அவன் என்ன செய்தான் இண்ணா "ஐ ஐயோ ! இங்கையா கொண்டாந்தைங்க—இந்த ஊரிலே திரு டர் காபுரா ரொம்ப அதிகமாயிருக்குதே—என் கிட்ட இருக்கர சவரன் நகை யெல்லாம் இந்த பெட்டியிலே போட்டு வைச்சிருக்கிரே—நீங்க அதெதெ யெடுத்தும் போயி, உங்க வீட்லே வைச்சிவையுங்க இந்த திருடர் குபார் அடங்கர வரைக்கும்" இண்ணு சொல்லி எங் கிட்ட கொடுத்தனுப்பினான். உம்—என்ன செய்யரது —அந்த பெட்டி யெல்லாம் தூக்கிகினு வந்து, அந்த உள் அறையிலே வைச்சி பூட்டு விட்டு வந்தேன் !— என்ன பொழைப்பு பொ ! எங்கே பார்த்தாலும் திரு டர் பயமிண்ணா !

**பலே.** தாதா !—அதுக்கெல்லாம் நீங்க ஒண்ணும் பயப்படாதைங்கோ – நாங்க ரெண்டுபேரு இருக்கரோம் !—இந்த செங்கல்பட்டு ஏரி ரெண்டு வருஷமா மழையில்லாதே வத்தி போன பிற்பாடு—வேலெ யில்லாதே தவிக்கிரோம். இந்த வருஷம் ஆடி மாசம் மழெ பெயும் இண்ணு ஜோஸ்யருங்க சொல்ராங்க—அந்த ஆடி மாசம் வரைக்கும் எங்களுக்கு சாப்பாடு போட்டு காப்பாத்தி வுடுங்க !—உங்ககாலண்டெ விழுந்து கெடக்கரோம்—நீங்க சொல்ர வேலேயே செய்திகினு உங்க சொத்தை யெல்லாம் காப்பாத்திகினு—இங்கே எவனுது திருடன் வந்தானுண்ணா—

**பக்.** அவன் மண்டையாவது ஒடையணும்—எங்க மண்டையாவது உடையனும் !

**பலே.** ஆமாம்—வேளெக்கு மாத்திரம் கொஞ்சம் கஞ்சியெ ஊத்திவுடுங்கோ எங்களுக்கு.

**அ.** ஆமாம் – நீங்க என்ன வேலே செய்வைங்கடாப்பா ?

**இருவரும்.** என்னவேலே வேணுமிண்ணாலும் செய்வோம்.

**அ.** ஆனல்—அந்த தொழு மரத்துலே கட்டியிருக்கர மாட்டே அவத்துகினு போய்—மேய்ச்சி கொண்டுவா நீ கொல்லெ பொறத்திலே கீரே பாத்தி பொட்டிருக்கரேன்—அதுக்கு அந்த கிணத்திலேகொஞ்சம் எறங்கி தொட்டியிலே தண்ணி கொண்டாந்து பாய்ச்சிவுட்டு வா—சாப்பாடு போடரேன்.

**இருவரும்.** அப்படியே தாதா—

[இருவரும் ஒவ்வொரு பக்கமாகப் போகிருர்கள்]

**அ.** இந்தத் திருட்டுப் பசங்கள்—என்னெ ஏமாற்றப் பார்க்க ராங்க—அதுக்குத்தான்—என் சொத்தையெல்லாம் மச்சான் வீட்டிலே கொண்டுபோய் வைச்சுட்டு வந்துட்டேன். அங்கே யிருந்து நான் கொண்டு வந்த பொட்டியே வேணு முண்ணா—திருடிக்கினு போவட்டும் !

காட்சி முடிகிறது.

## மூன்றாம் காட்சி

இடம்—அதே இடம். காலம்—சாயங்காலம்.

அப்பாசாமி முதலியார். திண்ணையின் மீது உட்கார்ந்து கொண்டு வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டிருக்கிறார். பக்கா திருடனும், பலே திருடனும் கீழே உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்.

அ. ஏண்டாப்பா, ராத்திரி இங்கே திண்ணையிலே படுத்துகினு இருந்தும் பக்கத்தறையிலே எவனோ திருடன்—கன்னம் வைக்கப்பாத்ததே உங்களாலே கண்டு பிடிக்க முடியலேயே! நான் தான் கெழவன்—உங்களுக் கென்னடாப்பா நல்ல வயசு காருங்கோ, எழுந்திருந்துபோய் அவனெ பிடிச்சி இருக்கக் கூடாது?

பலே. இல்லெங்கோ—நல்ல தூக்கம் வந்துது ராத்திரி, எனக்கு ஒண்ணும் சத்தமே கேக்கலே.

பக். எனக்கு ஒடம்பெல்லா கொஞ்சம் வலியாயிருந்து துங்க—தூங்கிவுட்டேன்—அந்த தூக்கத்திலே அப்படியே—தெரியாதெ போச்சி.

அ. சரி இண்ணைக்காவது—ஜாக்கிரதையா யிருங்க.
[உள்ளே போகிறார்.]

பலே. அண்ணா, நம்போ தோண்டன பள்ளத்தெ மண்ணெ போட்டு மூடிவுட்டும், இந்த கெழம் எப்படியோ அத்தெ கண்டு பிடிச்சுட்டுது பாத்தைங்களா?

பக். போனா போவது!—வேறே என்னமானாலும் வழி தான் பாக்கணும்—தம்பி இண்ணைக்கி உன்வேலே என்ன மாயிருந்தது?—அந்த் மாட்டே சரியா மெய்க்கலே அவன், நீ நாளெக்கு அந்த வேலயெ பாரடா அப்பா இண்ணு என் கிட்ட சொல்லிச்சி அந்த கெழம்—அது என்ன சமாசாரம்?

பலே. மாட்டே சரியா மேய்க்கலேயா?—அது பச்சை பில்லே ரொம்ப திண்ணுட்டு தள்ளாடிகினு வந்து சேர்ந்தது ஊட்டுக்கு!—ரொம்ப நல்ல மாடு. மேய்க்க காட்டுக்குப் போனவுடனே, அவுத்து உட்டேன், அதுவா பெசாதே மேய்ஞ்சிகினு இருந்துது—நான் நண்ணா

படுத்துகினு தூங்கினேன். பொழுது சாயரத்துக்கு ஒரு நாழிக்கி முன்னே—என் காலெ வந்து நக்கி எழிப்பிச்சி, நானு எழுந்து—புடிச்சிகினு வந்துட்டேன். ஊட்டுக்கு.

**பக்.** அப்போ—அது ரொம்ப—சுலபமான வேலெ தான்—

**பலே.** ஆமாம் அண்ணு—ஆணு—ஒடம்பெல்லா நோவுது—காட்டிலே பருக்காங்கல் மேலே படுத்துகினு தூங்கினது—ஒரு பாயும் தலையாணியும் மாத்திரம் எடுத்துகினு—போயிருக்கிறேன்—ரொம்ப சுகமாயிருக்கும். அண்ணு—உங்களே நாளைக்கு இந்த வேலெ பாக்கச் சொன்ணு—ஒரு பாயும் தலையாணியும் எடுத்துகினு போங்க. உம்—உங்க வேலெ என்னமாயிருந்தது அண்ணு ?

**பக்.** என் வேலெ ஒண்ணும் கஷ்டமே இல்லேடா தம்பி—அந்த கீரெ பாத்தி வெத்தலெ தோட்டத்துக்குப் பக்கத்துலே ஆத்துக்கால் போவுதே, அங்கே யிருக்குது. அத்தொட்டு அங்கே யிருக்கிர கெணத்துலே தண்ணி நெறையே இருக்குது. கிணத்துப்படியிலே கூட எறங்கவேண்டியதில்லே — இப்படி குனிஞ்சிகினு தோண்டியாலே மொண்டு பாத்திக்கு ஊத்தி விடலாம். அரெ நாழியிலே என்வேலெயெ முடிச்சூட்டேன். அத்தெ சொன்ணு வேறெ என்னமாணுலும் வேலெவைக்கப் போராருண்ணு, ஊட்டுக்கு வந்து "என்னுங்க—வேலெ ரோம்ப கஷ்டமா யிருக்குதுங்க. பாதிதான் ஆச்சி—எனக்கு ரொம்ப எளப்பாயிருக்குது கொஞ்சம் பழயது போட்டைங்கண்ணு சாப்பிட்டுட்டு, போயி மீதி வேலெயும் முடிச்சூடரேன்" இண்ணு கேட்டேன்—கெழவணுரு—ரொம்ப மனசு எளகினவரு!— உடனே உள்ளே போயி பழயது கொண்டு வந்து போட்டாரு—தம்பி, நாளைக்கு ஒரு வேளெ உன்னே இந்த வேலெபாக்கச் சொல்லுவாரு; நான் சொன்ன மாதிரி சொல்லு ; உனக்கும் வெய்யில்லேற பழயது போடுவாரு-அத்தெ சாப்பிட்டு

வுட்டு அங்கே போயி தூங்கிவுட்டு சாயங்காலமாக—நான் வந்தாப்போலே வந்தூடு.

பலே, அப்போ—அண்ணு, உங்களுக்கு மூணுவேளை கஞ்சி கெடைச்சுது !

பக். இல்லாதே என்ன !—அல்லாம் நம்பளா நடந்து கிரத்துலே இருக்குது. ஆனு ஒண்ணு சொல்றேன் கேளு. அந்த பழயது போடும்போது, கெழத்துக்கிட்ட நல்ல நாரத்தங்கா ஊறுகா இருக்குது—பலே ஷோக்காயிருக்கும்—அந்த பழயதுக்கும்—அதுக்கும் ; அதுலெ ரெண்டு பத்தே கொடுக்கச் சொல்லு.

பலே. அப்படியே ஆவட்டும் அண்ணு—இப்போ நம்போ தூங்கலாம் அண்ணு—அண்ணு, தூக்கம் வராப்போணு—இந்தக்கெழத்துக்கிட்ட இருக்கர சொத்தே தபாய்ச்சிகினு போவரத்துக்கு என்னமாணு வழி யோசனே பண்ணுங்கண்ணு.

பக். ஆமாம்—உம்—நீயும் யோசனே பண்ணிபாரு.

[இருவரும் திண்ணைகளில் படுத்துக் கொள்கின்றனர்.]

**காட்சி முடிகிறது.**

---

## நான்காம் காட்சி

**இடம்**—களத்தூர் ஏரிக்கடுத்த மேய்ப்பு நிலம்.

**காலம்**—பகல்

அப்பாசாமி முதலியார்மாடு கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிவருகிறது. அதன் பின்னல் **பக்கா திருடன்**, தலையில் ஒரு பாயையும் தலையணையையும் சுமந்து கொண்டு வியர்க்க வியர்க்க ஓடி வருகிறான்.

பக். [பாயையும் தலையணையையும் கீழே தொப்பென்று போட்டு] அப்பாடா! இனிமேலே இந்த பிசாசி பிடிச்ச மாட்டுக்குப் பின்னலே என்னலே ஓடி முடியாதுடாயப்பா !—அந்த திருட்டுப் பய நம்மெ ஏமாத்தி விட்டான் ! தான் கஷ்டப் பட்டது போதாதிண்ணு, நம்மெஒரு பாயும் தலையாணியும் தூக்கி கினு ஓட வைச்சான் !—அந்தப் பயலே சாயந்திரம் என்ன செய்ரேன்

பாரு !—அந்த எழவெடுத்த மாடு எக்கேடாவது கெடட்டும்—இங்கே படுத்துகினு கொஞ்சம் எளப் பாறிவுட்டு சாயங்காலமா வூடுபோய்ச் சேருவோம் !

[படுத்துக் கொள்கிறான்)

## ஐந்தாம் காட்சி

**இடம்**—ஆற்றோரமுள்ள ஒரு கீரைப் பாத்தி—ஒரு பக்கம் ஒரு ஆழமான கிணறு இருக்கின்றது.

**காலம்** நடுப்பகல்.

**அப்பாசாமி முதலியாரும் பலே திருடனும்,** அதன் பக்கத்தில் நின்று கொண்டிருக்கின்றனர்.

**அ.** ஏண்டாப்பா ! இப்போ உன்னே ஜோட்டாலே அடிக் கணுமோ இல்லையோ ? பாதி பாத்திக்கி பாய்ச்சியா யிச்சி இண்ணயே, எங்கேடா ஆச்சி ? கீரே பாத்தி யிலே ஒரு சொட்டு தண்ணியும் காணோம் !

**பலே.** எஜமான் கோவிச்சிக்கக் கூடாது !—இந்த தொட் டியெ பாத்தைங்களா—ஓட்டையாயிருக்குது !— இந்த பாழுங் கெணத்துலே அறவது படி எறங்கி இந்த தொட்டி தண்ணி எடுத்துகினு வந்தா—இந்த அற வது படி ஏற்றத் துக்குள்ளோ—அல்லா தண்ணியும் கெணத்திலேயே வடிஞ்சி போவுது ! நான் என்ன செய்யரதுங்க ?

**அ.** அதுக்கோசரம் எங்கிட்ட பொய் பேசனயோ—பாதி பாத்தி பாய்ச்சி ஆச்சி இண்ணு !அதெல்லாம் எனக்கு தெரியாது—வைக்கல் கிக்கைல் என்னமாவு வைச்சி அடைச்சி தண்ணி மொண்டு பாய்ச்சு ; சாயந்தரத் துக்குள்ளோ பாத்தி முழுதும் தண்ணி பாய்ச்சாப் போனு, உனக்கு இண்ணக்கி சாப்பாடு கிடையாது. இந்த பஞ்ச காலத்துலே ஒனக்கு என்னுத்துக்கு தண்ட சோறு போடரது ! வேலெயெ முடிக்காதே வூட்டுக்கு வந்தையா—பாரு சொல்ரேன் !

[போகிறார்.]

**பக்.** *சரிதான்! நானு அண்ணனெ ஏமாத்தப் போயி, அவன் என்னெ ஏமாத்தி என் வாயிலே மண்ணெ போட்டான் சரி—இந்த தோண்டிக்கி வைக்கலாவது அடைச்சி பாக்கலாம் !*

**காட்சி முடிகிறது.**

## ஆறும் காட்சி

**இடம்**—*அப்பாசாமி முதலியார் வீட்டுத் தெருத் திண்ணை.*

**காலம்**—*இரவு*

**பக்காத் திருடன்,** *ஒரு திண்ணையின் மீது படுத்துக் கொண்டிருக்கிறான்,* **பலே திருடன்,** *மெல்ல வந்து மற்றொரு திண்ணையில் படுக்கப் பார்க்கிறான்.*

**பக்.** *அடே தம்பி, ஏண்டாப்பா அந்த திண்ணையிலே படுக்கப் போரே ! வழக்கத்தெப் போலெ இங்கேயே வந்து படு—நான் கோவிச்சக்கலே !—நீ என்னெ மோசம் செய்ததும்—நானு உன்னெ மோசம் செய்ததும்—சரியாப் போச்சி.—*

**பலே.** *இல்லே அண்ணு—எனக்கு ஒடப்பு ஒரு மாதிரியாயிருக்குது—அல்லாம் நாளெ காலமே பேசிக்கலாம்—இப்போ எனக்கு ரொம்ப தூக்கம் வருது.*

**பக்.** *அல்லாம் தூங்கலாம் சீக்கிரம்—ஒண்ணு மாத்திரம் எனக்கு சொல்லிவுடு—மாட்டுப் பின்னுலே தான் ஓட வைச்சையே, பாழும் இந்தப் பாயி தலையாணியே ஏண்டா தூக்கிகினு போக வைச்சே.*

**பலே.** *மத்யான சாப்பாடு வாயிலேதாம் மண்ணு உழுந்துதே நீங்க மாத்திரம் நார்த்தங்கா ஊறுகா வேறே ஏன் கேக்க சொன்னீங்கோ ?—அது மாத்திரம் நீங்க செய்யலாமோ ?*

**பக்.** *போனு போவட்டும், நம்போ ஒருத்தரே ஒருத்தரு இப்படி ஏமாத்திகினு இருந்தா என்னு பிரயோஜனம் ? இந்த கெழத்தெ ஏமாத்தி அந்த பொட்டிலே இருக்கர சொத்தெ அமுக்கிகினு போவரத்துக்கு வழியே பாருடா அப்பா.*

**பலே.** அதாம் அண்ணு, யோசிச்சி பாக்ரேன்—ஒரு வழியை யும் காணேம்! அந்த கூரெ ஓட்டெ பிரிச்சிபாத்த சமாசாரம் என்ன மாவோ—

**பக்.** அடெ ! அதோ வருதுடா கெழம் ! கப்சப் !

**அப்பாசாமி முதலியார்** உள்ளேயிருந்து வருகிருர்.

**அ.** ஏண்டாப்பா—தூங்கி விட்டைங்களா ?

**இருவரும்.** இல்லைங்கோ—முழிச்சிகினு தாம் இருக்கரோம்.

**அ.** சந்தோஷம்—[திண்ணை மீது உட்காருகிருர்; இருவரும் எழுந்து நிற்கிருர்கள்.] உங்களே நான் ஒரு யோசனை கேக்கலா மிண்ணு வந்தேன்—இந்த ஊர்லே திருடர் காபுரா பெரிசா போச்சி!— அண்ணெக்கி என்ணண்ணெ —செவுத்துங் கீழே தோண்டி பாத்தாங்க—இப்பொ என்ணண்ணெ, கூரெ ஓட்டே பிரிச்சிப் பாத்திருக்காங்க! —அந்த பொட்டியே எப்படி பத்திரப் படுத்தரது இண்ணு பாக்கரேன்-நீங்க என்னமானு லும் யோசனே சொல்லுங்க பார்க்கலாம்.

**பக்.** அந்த பெட்டியும்—பக்கத்துலே—நாங்க ரெண்டு பேரும்-ராத்திரியிலே படுத்துகிரேம்-ஒருத்தர் மாத்தி ஒருத்தர் முழிச்சிகினு இருந்து காவலிருக்கரோம்— எவனுவது திருடன் கிட்ட வந்தா—

**பலே.** மண்டையே உடைச்சூடரோம் !—

**அ.** ஆம்— அது ஒரு நல்ல யோசனே தாம்—எனக்கென்ணு தோணுது—அந்த பெட்டியே மொள்ளமா—அதோ அந்த கெணத்துலே எறக்கி விடலாம். கெணத்துப் பக்கத்துலே நீங்கரெண்டுபேரும் காவலா படுத்துக் குங்க—நானு காலமே பொழுது விடிஞ்சவுடனே வேறெ எங்கேயாவது கொண்டு போய் வைச்சூட ரேன்.

**பக்.** அப்படியே செய்யுங்கொ.

**பலே.** நீங்க ஒண்ணும் பயப்படாதைங்கோ, அந்த பொட் டிக்கி நாங்க உத்தரவாதங்கோ.

[அப்பாசாமி முதலியார் உள்ளே போகிருர். இரண்டு திருடர்களும் குசு குசு என்று பேசிக்கொள்கின்றனர்.

**அப்பாசாமி முதலியார்,** ஒரு பெட்டியை வாயிற்படிக்கி இழுத்துக்கொண்டு வருகிறார்.

பக். இப்படி கொடுங்க—நாங்க தூக்கிகினு வர்ரோம்—கிணத்து வரைக்கும்.—

பலே. அண்ணே—உங்களுக்கு என்னாத்துக்கு கஷ்டம்—நான் ஒருத்தனே தூக்கி வுடுவேனே.

[பெட்டியைத் தலைமேல் தூக்கிக் கொள்கிறான்.]

இதென்ன எனக்கு இது ஒரு பளுவா ?—

[மூவரும் வீட்டிற்கருகிலுள்ள கிணத்தண்டை போகிறார்கள்]

அ. அடே அப்பா, ரெண்டு பேருமா ! புடிச்சி கெணத்தும் நடுப்பிலே போட்டுடுங்கோ.

பக். ஆமாங்க—போட்டுட்டா—நாளெக்கு காலமே நம்பொ இத்தெ என்னமா எடுக்கறது ?

அ. அது கஷ்டமில்லே-பாதாள கொலுசெ உட்டு, மாட்டி இழுத்தூடலாம். அதுக்குத்தான், கயித்துலே சுற்றி முடிச்சிங்க போட்டிருக்கரேன் பாருங்க.

பக். சரிதான் சரிதான்,—அந்தப்பக்கம் பிடிடா தம்பி—கெணத்துநடுவுலே போடணும்—பக்கத்திலே கிணத்திலே பட்டா—பொட்டி ஒடஞ்சி பூடும்.

[இருவருமாசத் தூக்கி கிணற்றில் பெட்டியைப் போட்டு விடுகிறார்கள்]

அ. சரிதான் நீங்கரெண்டு பேரும் ரெண்டு பக்கம் படுத்துங்க ; ஒருத்தர் மாத்தி ஒருத்தர் முழிச்சிகினு இருங்க காவலா—நாளெ காலமே—நான் வர்ரேன்.

[உள்ளே போகிறார்]

[இரண்டு திருடர்களும் படுத்துக் கொள்கின்றனர்]

**காட்சி முடிகிறது.**

## ஏழாம் காட்சி

**இடம்**—அதே யிடம். **காலம்**—நடுராத்திரி.

**பக்காதிருடனும், பலே திருடனும்** கிணற்றின் இரு புறத்திலும் படுத்துக்கொண்டு நித்திரை செய்வது போலிருக்கின்றனர். மாறி மாறி ஒவ்வொருவனுகத் தலையைத் தூக்கி மற்றவன் விழித்துக்கொண்டிருக்கிருனு தூங்கி விட்டானு என்று பார்த்துக் கொண்டிருக்கின்றனர் கடைசியாக ஒரு முறை இரண்டு பேரும் ஏக காலத்தில் தலையைத் தூக்கிப் பார்க்கின்றனர். இருவரும் மெல்ல நகைக்கின்றனர்.

**பக்.** ஏண்டா ! இதென்னு வேலே இது ?

**பலே.** அத்தெததாண்ணு உங்களே கேக்கலாமிண்ணு வாயே எடுத்தேன்.

**பக்.** உம் !—போதும் நம்போ ஒருத்தரே ஒருத்தர் ஏமாத்தரது ! பொழுது வெடிஞ்சா இந்தக் கெழம் இந்த பொட்டியே அப்புறப் படுத்திடும் ; அதுக்குள்ளே இத்தெ எப்படியாவது நம்போ அமிக்கிகினு பூடணும் ; எடுத்தும்போயி நம்ப ரெண்டு பேரும் பங்கிட்டுகலாம்.

**பலே.** ஆமாண்ணு ! அதுதான் வழி!—இத்தெ கெணத்திலே யிருந்து என்னுமா எடுக்கறது ?

**பக்.** அந்த பாதாள சங்கிலியிருந்தாலும் எடுக்கலாம்.

**பலே.** அண்ணு !—அத்தெ அந்த் கெழம் எங்கே ஒளிச்சி வைச்சிருக்குது இண்ணு எனக்கு தெரியும்—அத்தெ போய் நானு கொண்டாரட்டுமா ?

**பக்.** சந்தடி பண்ணுதெ மொள்ளமா கொண்டா!—சப்தம் கிப்தம் கேட்டா கெழம் எழுந்துடும்.

**பலே.** அதெல்லாம் நான் பார்த்துகிறேன் அண்ணு—நீங்க இங்கேதானே இருக்கரைங்ளா ?

**பக்.** ஏண்டா ? இதிலே கூட சந்தேகமா ? நான் ஒருத்தனு இந்த பொட்டியெ என்னமாடா எடுக்க முடியும் வெளியே !—போய் சிக்கிரம்வா—பொழுது வெடியப் போறது.

[பலே திருடன் வீட்டின் புறம் போகிருன்]

தம்பி நமக்கு பேடலே இருக்கரான்!—நாம் தான் அந்த பாதாள கொலுசு இருக்கிற இடத்தெ பாத்து வைச்சிருக்கரேன் இண்ணு நெனச்சிகினு இருந்தா—இவனும் பாத்துவைச்சிருக்கான், கெட்டிக்காரன்—ஏமாந்தா நமக்கே நாமம் போடுவான்!

**பலே திருடன்,** பாதாள கொலுசைக் கொண்டு வருகிறுன்.

**பலே.** இந்தாங்க அண்ணு!

**பக்.** ஆம்—சரி!—கிணத்துலே உட்டு பாக்கலாம்.

[அதை விட்டுப் பார்க்கிருர்கள்—பெட்டி அதில் சிக்காததைக் கண்டு.]

அடே தம்பி—கொலுசுலே அந்தப் பெட்டி கட்டியிருக்கர கவுறுசிக்கலேடா-காலமாவுது—சீக்கிரம் பொழுது விடியும் போலே இருக்குது—எனக்கு ஒரு யுக்தி தோணுது-நீ இந்த கவுத்தெ புடிச்சிகினு கெணத்துக்குள்ளோ இறங்கி—தண்ணியிலே முழுகி, அந்த சங்கிலியெ அந்த பெட்டி கவுத்துலே மாட்டி விடு—நான் மெல்ல இழுத்தூடரேன்.

**பலே.** அப்பறம்—நீங்க—இந்த பொட்டியெ எடுத்துகினு டும்கி கொடுத்துடுங்கோ—நானு கெணத்துலே ஆப்டுகிறேன்!—என்னுண்ணு இது!

**பக்.** சே சே! அப்படி செய்வனு—உனக்கு துரோகம்!

**பலே.** ஆனுகா நீங்க இறங்குங்கோ—நானு—முன்னே பெட்டியே இழுத்துட்டு—உங்களுக்கு சங்கிலியே எறக்கறே—நீங்க வந்து வுடுங்கள்.

**பக்.** ஏண்டா! நீ டும்கி கொடுத்தா?

**பலே.** என்னுண்ணு! என்னெ நம்பமாட்டேண்ரைங்கோ!—நானு அப்படி செய்வேனு.

**பக்.** நானு மாத்திரம் அப்படி செய்வேனு? என்னெ மாத்திரம் நீ நம்பலேயே!—நீ தான் எறங்கு சொல்ரேன்.

**பலே.** அது முடியாது—நீங்க எறங்குங்க அண்ணு!—அதோ நம்ப எலிமிச்சம் பட்டியிலே இருக்கற வாலுசாமி

மேலே சத்தியமா சொல்ரேன்—நானு உங்களே துரோகம் பண்ணலே !

பக். நானும் அப்படியே சத்தியமா சொல்ரேன்—நீ இறங்கு பாக்கலாம்.

பலே. அண்ணு!—இப்படி நம்ப ரெண்டுபேரும் வாதாடிகினு இருந்தா பொழுது வெடிஞ்சி போவும்—நானு ஒரு நியாயம் சொல்ரேன்—கேளுங்கோ—நானு போயி பாதாள சங்கிலி கொண்டாந்தெ—அத்தெ தொட்டு—நீங்க தான் இறங்கணும்.

பக். உம் ! [யோசித்து] இப்படி வாயாடிகினு காலத்தெ போக்கரத்தெ வுட்டு, நான் தான் பொட்டியெ முன்னே கட்டி விட்டு கயித்தே ஆட்ரேன்—மொள்ளமா தூக்கி விடு—உடனே மறுபடியும் சங்கிலியே கீழே விடு—அத்தே புடிச்சிகினு நானு ஏறி வந்துடரேன்.

பலே. அப்படியே செய்ரேண்ணு.

பக். செய்யாப்போனேயா !

பலே. என்னுண்ணு அது!—இன்னமும் சந்தேகமா ?—அந்த வாலு சாமிமேலே ஆணே படிக்கு — உங்களெ — மோசம் பண்ணலே.

பக். சரி!—அடே! எனக்கு ஒரு யுக்தி தோணுது—இந்த சங்கிலியே முன்னே மேலே இழுத்துக்கோ—கிணத்தின் செவுத்திலே படாதெ ; அந்த பெட்டியோடே இழுக்கும் போது, பக்கத்துலே பட்டு சத்தம் கெட்டா கெழம் முழிச்சிகும்—நான் சொல்ரபடி கேளு—அந்த சவுக்கத்தெ எடுத்து இடுப்பிலே கட்டிகினு உன் தோவத்தியே எங்கிட்ட கொடு ; அத்தெ அந்த பொட்டியின் மேலே நண்ணு சுத்திவுடரேன்—அப்பொ கெணத்து செவுத்துலே அடிபட்டாலும் கேக்காது.

பலே. ஆமாண்ணு ! உங்கபுத்தியே புத்தி அண்ணு!—நீங்களும் அப்படியே உங்க தோவத்தியையுப் சுத்திவுடுங்க.

**பக்.** சந்தேகமென்ன ? அதுக்குத்தான் என் தலே சவுக்கத்தே முன்னேயே அவுத்துகுனேனே !

[பலே திருடன் தன் தோவத்தியை அவிழ்த்துக் கொடுக்க அதை எடுத்துக்கொண்டு, தன் தோவத்தியையும் அவிழ்த்துக் கொண்டு, சங்கிலியைப் பிடித்துக் கொண்டு கிணற்றுள் இறங்குகிருன். பலே திருடன் அதன் கயிற்றை மெல்ல விடுகிருன்.]

[இறங்கும்போது] பொட்டியிலே மாட்டின உடனே கவுத்தெ ஆட்டரேன் மொள்ள ஜாக்கிரதையாக தூக்கு—நேரா—அடிபட விடாதே !

**பலே.** இல்லேண்ணு !—அதெல்லாம் நானு பாத்துகிறேன்—நீங்க இறங்குங்க—

[அப்படியே பக்கா திருடன் இறங்கி கொஞ்சம் பொறுத்து கயிற்றை ஆட்ட, பலே திருடன் அதை மெல்ல சேந்துகிருன் ]

அப்பா!—என்ன பளுவாயிருக்குது ! பொட்டியெல்லாம் தண்ணிகோத்துகினு இருக்கராப் போலெ இருக்குது !—இத்தான் சமயம்—நம்பொ டும்கி கொடுக்க !

[பெட்டி மேலே வந்தவுடன்.]

துணி யெல்லாம் மேலே போட்டு பெரிசா சுத்தி யிருக்கரான் ஆசாமி ! எங்கே நம்போ தோவத்தி பூட்டுதோ இண்ணுபாத்தே !—இது தான் சமயம் !

[பெட்டியைத் தலேமேல் எடுத்துக்கொண்டு ஒடுகிருன்.]

காட்சி முடிகிறது.

---

## எட்டாம் காட்சி

**இடம்**—எலிமிச்சம்பட்டியில் பாழடைந்த ஹனுமார் கோயில், **காலம்**—விடியற் காலம்.

**பலேதிருடன்** ஒரு பெட்டியை தலேமீது சுமந்து கொண்டு வியர்க்க வியர்க்க ஓடி வருகிருன்.

**பலே.** அப்பா !—என்னபளுவு !—இனிமேலே இத்தெ தூக்கினு போவ என்னலே முடியாது.

[கீழே போடப்பார்க்கிருன்.]

பக். [பெட்டியின் மேலிருக்கும் துணியில் மறைந்திருந்து] மொள்ள !—மொள்ள ! [கீழே குதிக்கிருன்.]

பலே. அண்ணு !—நீங்களா ? ஓ !— என்னுடா பளுவு அதிகமாயிருக்குதே ! இண்ணு பாத்தேன் !

பக். அண்ணுவெல்லாம் இருக்கட்டும் - சத்தியம் பண்ணிவிட்டு என்னெ கெணத்திலே வுட்டூட்டு வர பாத்தையா !— திருட்டுக் கழுதை !

[அவனை அடிக்க இருவரும் சண்டை போடுகின்றனர்.]

தலையாரி **தாண்டவராய பிள்ளை** இரண்டு ஆட்களுடன் வருகிருன்.

**தா.** என்னடாப்பா ? இங்கே கலாடா ?

**இருவரும்.** தலையாரி ! தலையாரி !

**தா.** என்ன செய்யரைங்க இங்கே ?

**பக்.** ஒண்ணும் இல்லே அண்ணு-நாங்க குத்துசண்டே பழகரோம் !

**தா.** ஆமாம் இதென்ன பொட்டி? —அடே ! புடிச்சிக்கிங்கோரெண்டு பேரையும். அந்த அப்பாசாமி மொதலிபிராது கொடுத்திருக்காரு, தன் வீட்டிலே ஒரு பொட்டிகாணுமெ போச்சிண்ணு ! அவர் சொன்ன அடையாளத்துலே இதுவா தானிருக்கணும்.

[ஆட்கள் இரண்டு திருடர்களையும் பிடித்துக் கொள்கின்றனர்.]

**பலே.** அண்ணு! அண்ணு! எங்களே எப்படியாவது தப்பிச்சு வுடுங்கள்.

பக். அண்ணு ! இந்த பொட்டியிலே இருக்கரத்துலே நீங்க ஒரு பங்கு எடுத்துகுங்க !

பலே. ஆமாம் அண்ணு—மூணு பங்கு போட்டு, நீங்க ஒரு பங்கு எடுத்துகுங்க. எங்களுக்கு இரண்டு பங்கு கொடுத்துடுங்க—ரெண்டு பேருக்கும்.

**தலையாரியின் ஆட்கள்.** எங்களுக்கு ?

**பக்.** அண்ணு ! இவர்களுக்கு அதுலே இருககரத்துலே—என்ன மாறு கொடுத்தூடுங்க.

**தா** அடே ! நான் சொல்ரபடி செய்யுங்க. நான் நடுவுலே உக்காந்துகிறேன்.-நீங்க ரெண்டு பேரும் பக்கத்துலே நிண்ணுகுங்க-என் ஆளுங்க முன்ணுலேயும் பின்ணுலே யும் நிக்கட்டும் இந்த பொட்டியெ உடச்சி அதுலே இருக்கரத்தெ என் தலேமேலே கொட்டுங்க. என் தலே மேலெயும் ஒடம்புமேலெயும் என்ஞன்ன—ரூபாய்—சொத்தெல்லாம் நிக்குதோ—அதெல்லாம் என்னீது—சோத்துகைபக்கம் உழரதெல்லாம் உன்னீது ; பீச்சகை பக்கம் உழரதெல்லாம் உன்னீது !- எனக்கு முன்னே உழரதெல்லாம் இவனுது—பின்ணுலே உழர தெல்லாம் இவனுது !

**மற்றவர்கள்.** ஆமாஙக ! ஆமாங்க ! அப்படியே !

[எல்லோருமாக சேர்ந்து பெட்டியின் பூட்டை உடைக்கின்றனர். இதற்குள்ளாகத் தலேயாரி தன் தலே குட்டையை பெரியதாகக் கட்டிக் கொள்ளுகிருன்.]

**தா.** அடே ! இப்பொ தெறக்காதைங்க !-அப்படியே தூக்கி என் தலேமேலே கவுருங்க—மொள்ள ! மொள்ள !

[அப்படியே மற்றவர்கள் செய்ய, அதிலிருந்து கிளிஞ்சல்கள், ஓட்டுபாளேயம், கற்கள், மண்ணுங் கட்டிகள், காதறுந்த செருப்புகள், முதலியன தலேயாரியின் தலேயில் விழுந்து நான்கு பக்க மும் சிதறுகிறது.]

**எல்லோரும்.** அடடே !—அந்த கெழம் நம்போ எல்லோரை யும் ஏமாத்திவுட்டுதுடா !

**காட்சி முடிகிறது.**

**பிரஹஸனம் முடிகிறது.**

# மாறுவேட விருந்து

*அல்லது*

## (சபாபதி ஐந்தாம் பாகம்)

**நாடக பாத்திரங்கள்**

**சபாபதி முதலியார்**
**சபாபதி [வேலையாள்]**
**கிருஷ்ணசாமி முதலியார்**
**குமரகுரு**
**முருகேசம்**
**நரசிம்மாச்சாரி**
**இன்னும் பத்து பன்னிரண்டு சிநேகிதர்கள்**
**தந்தி ஆபீஸ் பியூன்.**

## முதல் அங்கம்

### முதற் காட்சி

*இடம்—சபாபதி முதலியார் வீட்டில் ஓர் அறை.*

**சபாபதி முதலியார், கிருஷ்ணசாமி, குமரகுரு, முருகேசம் நரசிம்மாச்சாரி,** *முதலிய சிநேகிதர்களெல்லாம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.*

**ச. மு.** *அப்பொழுது இந்த பான்சி டிரெஸ்* (Fancy dress( *பார்டியை வருகிற சனிக்கிழமை சாயங்காலம் வைத்துக் கொள்ளலாம் பிரதர்ஸ்—நீங்களெல்லாம் என்னென்ன வேஷத்தில் வரப்போகிறீர்கள்? சொல்லுங்கள்.*

**கி.** *இருங்கள் இருங்கள்!—ஒருத்தரும் ஒன்றும் சொல்லாதீர்கள்!—எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது—அத்தான், அன்றைக்கு நம்முடைய புத்திசாலி சபாபதியை—மெத்தைபடியருகில் காவலிருக்கச் சொல்லுங்கள், அன்றைக்கு யாராவது வேஷம் போட்டுக்*

கொண்டுவந்தால் ஒருவரையும் விடக் கூடாதென்று கட்டளை யிடுங்கள்—நாங்கள் எல்லாம் எப்படியாவது அவனை எங்கள் வேஷங்களால் ஏமாற்றி மேலே வர வேண்டும். யார் யார் அப்படி ஜெயித்து வருகிறார் களோ அவர்களுக்கெல்லாம் நீங்கள் பிரைஸ் கொடுக்க வேண்டும். தோற்றுப் போகிறவர்களெல்லாம் உங் களுக்கு பைன் (fine) கொடுத்து விடுகிறோம்!

**மற்றவர்.** ஆம் ஆம்! அதுதான் நல்லயோசனை!

கி. அப்பொழுது—இன்றைக்கு நேரமாகிறது—நாங்கள் விடை பெற்றுக்கொள்ளுகிறோம்.

[எல்லோரும் சபாபதி முதலியாரிடம் விடைபெற்றுக் கொண்டு போகின்றனர்.]

**காட்சி முடிகிறது.**

---

## இரண்டாம் காட்சி

**இடம்**—சபாபதி முதலியார் வீட்டின் கேட்டுக்கடுத்த அறை. ஒரு புறம் மெத்தைக்கு போகிற படி யிருக்கிறது. **சபாபதி முதலியாரும், சபாபதியும்** வருகிறார்கள்.*

**ச. மு.** அடே சபாபதி, நான் சொன்னதை ஞாபகம் வைத்துக்கொள். என் சிநேகிதர்களெல்லாம் ஏதாவது வேஷம் போட்டுக் கொண்டு வருவார்கள். அவர்கள் ஒருவரையும் விடாதே, யாரையாவது விட்டாயோ அவர்களுக்கெல்லாம் நான் பிரைஸ் கொடுக்கவேண்டி வரும், விடாமல் நீ தடுத்தால் அவர்களெல்லாம் எனக்கு பைன் (fine) கொடுப்பார்கள். அந்த பைனை யெல்லாம் உனக்கு கொடுத்து விடுகிறேன்—தெரியுமா?

**ச.** சரிதாம்பா—அந்த பைனை யெல்லாம் நீயே யெடுத்துக் கோப்பா! அதுக்கு பதில்—நானு நீ சொன்னபடி செய்தா—எனக்கு ஒரு பட்டப் பெயர் கொடுப்பா.

**ச. மு.** உனக்கென்னுடா பட்டப் பெயர் கொடுக்கிறது?

ச. உனக்கு மாத்திரம் கவர்மெண்டார்—திவானு பகதூர்—இண்ணு பட்டப் பேரு கொடுக்கலையோ?—அந்த மாதிரி நீ எனக்கு கொடுப்பா.

ச. மு. அப்படி சொல்ரையொ?—அப்படியே ஆகட்டும்-இது சுலபம் தான்—நீ மாத்திரம் நான் சொல்றபடி செய்தா—அசாத்திய ராமகோடி சூரன்!—இண்ணு பட்டப் பெயர் கொடுக்கிறேன்.

ச. என்ன என்ன? இன்னொருதரம் சொல்லப்பா!—அது என் வாயிலே நொழையலே அப்பா.

ச. மு. அசாத்திய ராமகோடி சூரன்!

ச. நண்ணு யிருக்குது அப்பா—நீ சொன்னபடியே செய்ரேம்பா.

ச. மு. அடே, என் சினேகிதர்கள் தவிர—மற்றவர்களுக்கு டிக்கட் கொடுத்திருக்கிறேன். அவர்களை யெல்லாம் தடுக்காதே. அவுங்கல்லாம் டிக்கட் காட்டணு—உட்டுடு.

ச. சரிதான் சரிதான்—நீ போப்பா—நான் பாத்துக்கிறேன்

[சபாபதி முதலியார் போகிறார்.]

நான் ரொம்ப ஜாக்கிரதையாயிருக்கணும்—டிக்கட் லாதெ ஓர்த்தரையும் மெத்தைக்கி போக விடக்கூடாது—அப்போ தான் எனக்கு பட்டப்பேர் கொடுக்கும் அப்பா—என்ன பட்டப்பேர் சொல்லிச்சி—என்னமோ அசாத்திய—ராமன்—இன்னு சொல்லிச்சே. மறந்துபூட்டுது— அசாத்திய ராமன்! — அசாத்திய ராமன்!—உம் — சாப்பாட்டு ராமன் மாதிரி இருக்குது.—

**குமரகுரு** தபால் பியூன் வேஷம் பூண்டு வருகிறார்.

ஏய்!—யாரது மேலே போகப்பார்க்கிறது?

கு. போஸ்ட்மான்!

ச. ஓ! தபால்காரனு!—போ போ மேலே!

[சிநேகிதர் மேலே போகிறார்.]

**சபாபதி முதலியார்** விரைவில் இறங்கி வருகிறார்.

ச.மு. என்னுடா தடிராமா ! டிக்கெட் இல்லாதே ஒருத்தரே மேலே உட்டுட்டையே !

கு. ஏ !—இல்லேப்பா !—தபால்காரம்பா !

ச.மு. மூண்டம் !—டபால்கிரனு மில்லே டப்பாஸ் காரனு மில்லே, வேஷம் போட்டுகினு வந்திருக்கிருருடா என் சிநேகிதருங்கள்ளே ஒரத்தர் !—இனி மேலாவது ஜாக்கிரதையாயிரு முண்டம் ! [மேலே போகிருர்.]

வாஸ்தவமான டெலிகிராப் பியூன் வருகிருன்.

ச. அடடா ! அது வேஷமா அது?—சரி இருக்கட்டும் டிக்கெட் இல்லாதே ஓர்த்தரையும் மேலே உடரனு பாரு இனிமேலே.

ச. ஏய் !—நில்லுங்கையா ? டிக்கெட் எங்கே ?

வா. டிக்கெட்டா ?—உனக்கென்னுடாப்பா பயித்தியமா ? ஐயாவுக்கு தந்தி கொடுக்கணும்.

ச. அதெல்லாம் ஒதவாது—நீங்க வேஷம் போட்டுகினு வந்திருப்பைங்கோ—டிக்கெட் இல்லாதே உடமாட்டேன்.

வா. நான் வேஷம் போட்டுகினு வந்திருப்பேனு ? —ஏ ! பயித்தியம், உடரையா இல்லையா ?

ச. நான் உட மாட்டேன்.

வா. [உரக்க] ஐயா! முதலியார், உங்களுக்கு தந்தி வந்திருக்கிறது—அதே கொடுக்க வந்தா, உங்க ஆள் உடமாட்டேன்ரா !

ச.மு. [இறங்கி வந்து] என்னுடா ! பயித்தியகாரா தந்தி கொண்டு வந்த அந்த ஆளேகூடவா உடத்தேவலே இண்ணு சொன்னெ ? மடையா!—நீ வா அப்பா !

[மேலே அழைத்துக்கொண்டு போகிருர்]

ச. மடயனு !—உம்—பட்டப் பேர் வேணுமிண்ணு, இந்தப் பேர்வந்தது !

நரசிம்மாச்சாரி பரிசாரகனுக வேஷம் பூண்டு வருகிருர்.

ஐயா ! கொஞ்சம் நில்லுங்க—என் உத்திரவில்லாமே, ஒருத்தரும் மெத்தைக்கு போகக் கூடாது ! உங்க டிக்கெட்டு எங்கே ?

ந. எனக்கென்ன துக்கப்பா டிக்கெட்? முதலியார் பார்ட்டிக்கு பலஹாரம் பண்ணிக்கொண்டு வரச்சொன்னார் —அத்தெ கொடுத்தூட்டு போக வந்தேன்.

ச. பலகாரமா ?—காட்டுங்க பாக்கலாம் — நண்ணுயிருக்கிருப் போலிருக்குது—ஒண்ணு கொடுத் தூடுங்க உட்டுடரேன் உங்களே [ஒன்றை வாங்கிக்கொண்டு] நீங்க மேலே போங்கள் !

[நரசிம்மாச்சாரியார் மேலே போகிருர்.]

[அதை வாயில் போட்டுக்கொண்டு] தூ தூ தூ !—மண்ணுங் கட்டி ! [துப்புகிருன்.]

**முருகேசன்** வருகிருர்

ஐயா ! ஐயா !—நில்லுங்க! டிக்கெட் எங்கே ?

மு. அதுக்குத்தாம்பா, உங்கிட்ட வந்தேன்—டிக்கெட் விக்கர இடத்திலே போய் கேட்டேன். அஞ்சு ரூபாய் நோட்டுக்கு சில்லரை இல்லேண்ணுங்க !—உங்கிட்ட —சில்லரை இருக்குதா ?

ச. இல்லையே !

மு. கால் ரூபா வட்டம் தர்ரேன்.

ச. கால் ரூபாயா ?—ஆனு—கொடுங்க—அந்த பக்கத்து கடை காரன் கிட்ட போயி சில்லரே வாங்கினு வர்ரே !

[ஒரு தப்பு நோட்டை வாங்கிக்கொண்டு வெளியே போக, முருகேசம் மேலே போய்விடுகிருர்.]

[திரும்பி வந்து] என்ன ஐயா இது ? தப்பு நோட்டே கொடுத்தைங்களே !—எங்கே அவரு ?— அடெடெ ! —மேலே பூட்டாரு போலே யிருக்குது !—

**சபாபதி முதலியார்** கீழே இறங்கி வருகிருர்.

ச.மு. ஏண்டா ! கழுதே, எத்தனி பேரெ இப்படி டிக்கெட் இல்லாதே விடப்போரே ! இனிமேலே, யாரையாவது ஏமாந்து டிக்கெட் இல்லாதே உட்டையா உன்னெ உடனேடிஸ் மிஸ் பண்ணிவிடுவேன் [போகிருர்.]

ச. டிஸ்மிஸ்—பண்ணுவிடுவாரு—வாஸ்தவம் தான்--இனிமேலே ஒருத்தரையும் டிக்கெட் இல்லாதே உடவே கூடாது.

**கிருஷ்ணசாமி முதலியார்** வருகிறார்.

**ச.** ஐயா கொஞ்சம் நில்லுங்க!—எங்கே உங்க டிக்கெட்?

**கி.மு.** ஏண்டா ! சபாபதி!—எனக்கு கூடவா டிக்கெட் !

**ச.** ஆமாம்! எல்லாருக்கும் டிக்கெட்!—இல்லா போனா அப்பா மிஸ் டிஸ், பண்ணிவுடும்.

**கி.மு.** நீ கெட்டிக்காரன்-ரொம்ப சுரு சுருப்பா வேலெ செய் யரே! டிக்கெட் இல்லாதே என்னெ உடரையா இல் லையா இண்ணு பார்த்தேன் நான் டிக்கெட் இல்லாதே வருவேனா ? இந்தா டிக்கெட். (ஜேபியிலிருந்து ஒரு சினிமா நோட்டீசை கொடுக்கிறார்)

**ச.** என்னாங்க !– இது என்னமோ—சின்னம்மா–நோட்டீஸ் மாதிரி இருக்குதே !

**கி. மு.** அத்தேதான் அத்தான் டிக்கெட்டா வைச்சிருக்கிறாரு. (மேலே போகிறார்)

**5-வது சிநேகிதர்** வயித்தியராக வேஷம் பூண்டு வருகிறார்

**ச.** ஐயா ! எங்கே மேலே போகப் பாக்கிறைங்க !—நில் லுங்க! எங்கிட்ட டிக்கெட் கொடுக்காதே யாரும் மேலே போகக் கூடாது இண்ணு உத்திரவு—எங்கே உங்க டிக்கெட் ?

**5. சி.** ஏண்டாப்பா ! சபாபதி—எனக்குக் கூடவா டிக்கெட் பெரியம்மாளுக்கு என்னமோ கீல்வாயு இண்ணு சொல்லி யனுப்பனாங்க—அதுக்காக வந்திருக்கிறேன். நான் பார்ட்டிக்காக வந்தேனிண்ணு நெனெச்சிகினை யோ!—பயித்தியக்காரா !

**ச.** இல்லேங்கோ இல்லேங்கோ ! நீங்க கோவிச்சிக் காதைங் கோ—எனக்குக் கூட கொஞ்சம் கை பாத்தூட்டுப் போங்க–

**5. சி.** உனக்கென்ன உடம்பு ?

**ச.** எனக்கு உடம்பு என்னாண்ணு எனக்கு தெரிஞ்சா, உங்களே கேப்பானேன் ? நீங்களா பார்த்து சொல் லுங்க.

**5. சி.** [அவன் நாடியைப் பார்ப்பது போல் பார்த்து]—உம் —உன் நாக்கெ நீட்டு—உம்—கண்ணெ கொஞ்

சம் மூடிக்கொள்— [சபாபதி அப்படியே செய்ய, வயித்தியர் சந்தடி செய்யாமல் மெத்தையேறிப்போய் விடுகிறார்.

ச. என்னுங்க !—எத்தனி நாழி நான் கண்ணெ மூடிகினு—நாக்கெ நீட்டிகினு இருக்கிறது—கழுத்து நோவுதுங்க—சீக்கிரம் பாத்து சொல்லுங்க !—

[கண்ணைத் திறந்து பார்த்து]

ஓகோ ! இவர் கூட டும்கி கொடுத்துட்டாரு ! அப்பறம் அப்பா கோவிச்சிகினு மிஸ் டிஸ் பண்ணிவுடுமே !—இதுக்கு என்ன செய்யரது ?—ஆ ! எனக்கு ஒரு யுக்தி தோணுது—மச்சா முதலியாரு ஒரு டிக்கெட் கொடுத்தூட்டுப் போயிருக்கிறாரே ! அத்தெ ரெண்டாகிழிச்சி வைச்சிக்கிறேன்.

[அப்படியே செய்கிறான்.]

**6—வது சிநேகிதர்** புகைப்படம் பிடிப்பவர் போல் வேஷம் பூண்டு வருகிறார்.

ச. சார் சார் ! கொஞ்சம் நில்லுங்கள் டிக்கெட் கொடுத்தூட்டு மேலே போங்கள்.

6. சி. என்னடாப்பா அது! முதலியார் ஏதோ Fancy Dress Party கொடுக்கரேன் — அத்தே Photo பிடிக்கணும் இண்ணு வர சொன்னாரு ; டிக்கெட் என்ன எனக்கு ?

ச. ஆமாம், அப்பா சொல்லியிருந்தா சரிதான்-ஒரு வேளெ நீங்க வேஷம் போட்டுகினு வந்தா எனக்கென்னமா தெரியரது ?

6. சி. இதோ பார் ! காமிரா அல்லாம் கொண்டு வந்திருக்கிறேன்.

ச. ஆனா—நீங்க வாஸ்தவமா படம் புடிக்கரவராயிருந்தா—என்னெ கொஞ்சம் படம் பிடிங்கோ! அப்பொ உட்டுடரேன்,

6. சி. இதோ ! அப்படியே ஆகட்டும்.

[காமிராவை ஏற்பாடு செய்கிறார்.]

—இந்தா—இந்த நாக்காலீ மேலே உட்காரு—உம் உம்—கொஞ்சம் நில்லு — உன்னெ மன்மதனெ போலே நிக்க வைச்சி படம் பிடிக்கரேன்.

ச. என்னெ !--மன்மதனெப் போலே!-பலே!-அப்படியே நிக்கரேன். எப்படி நிக்கறது ?

6. சி. நான் கற்றுக் கொடுக்கிறேன்.
[மன்மதன் அம்பு எய்வது போல் நிக்க வைக்கிருர்.]
—அசையாதே அப்படியே இருக்கணும் !-நீ என் பக்கம் பார்க்காதே, நேரா பாரு-உன் முகவெட்டுக்குநேரா படம் பிடிச்சா நண்ணுயிராது—சைட்லே யிருந்து பிடிக்கணும்—நான் ஸ்டெடி (Steady) இண்ணுசொல்லரேன் ! அப்படியே அசையாமலிரு. வெளிச்சமதிகமாயில்லாததிஞலே எக்ஸ்போஷர் (Exposure) கொஞ்சம் அதிகமா கொடுக்கணும்!—ஸ்டெடி (steady!)

[மெல்ல காமிராவை எடுத்துக்கொண்டு மெத்தையேறிப் போய்விடுகிருர்.]

ச. ஐயா! படம் பிடிச்சாச்சுதுங்களா ?—எத்தனி நேரம் இப்படியே கையெ வைச்சிகினு இருக்கரது?—எத்தனி நேரம் இப்படியே மூஞ்சே வைச்சிகினு இருக்கரது—மன்மதனுக்கு கைநோவுதையா ! — என்ளு பதிலே காணோம் ? [திரும்பிப்பார்த்து.]

ஓகோ ! இவர் கூட டூம்கி கொடுத்தூட்டாரு !-போனு போவுது ! எனக்கு பயமில்லே—இவருக்காக இன்ஞெரு டிக்கெட் கிழிச்சிக்கலாம்.

[அப்படியே செய்கிருன்.]

**7-வது சிநேகிதர்** அம்பட்டன் வேடம் பூண்டு வருகிருர்.

7. சி. ஐயா எங்கே யிருக்கருரு ?

ச. நீங்க ! நீங்க !—நீ !—யாரு ?

7. சி. நான் அம்பட்டன் ?

ச. இந்த கதெயெல்லாம் எனக்கு தெரியும் !—நீங்க அம்பட்டன் வேஷம் போட்டுகினு வந்திருக்கரைங்க.

7. சி. இல்லேங்க! நான் வாஸ்தமா அம்பட்டன் தான்.

ச. அது எனக்கு என்னமா தெரியரது ?

7. சி. உனக்கு வேணுமிண்ணு க்ஷவரம் பண்ணி காட்டுகிறேன்.

ச. ஏதோ பாக்கலாம் !—முக க்ஷவரம் பண்ணு.

7. சி. அப்படியே !— [சோப்பைக் கரைத்து முகத்தில் எல்லாம் பூசி விடுகிறார்]

ச. கண்ணு !—கண்ணப்பா !

7. சி. புருவம் க்ஷரவம் பண்ணத் தேவலே !

[கண்ணையும் மூடி விடுகிறார்.]

ச. சீக்கிரம் !—எத்தனி நாழி நான் கண்ணெ மூடிகினு இருக்கரது.

7. சி. இதோ கத்தியைக் தீட்டிக் கொண்டு வருகிறேன்.

[மேலே மெத்தைக்குப்போய் விடுகிறார்]

ச. என்னப்பா ! அது !—கண்ணல்லாம் எரியுது ?—சீக்கிரம் !—

[கண்ணைத் திறந்து பார்த்து.]

அடடே ! இவரும் வேஷம் தாண்டா !—உம்! — இனி மேலே நமக்கு பயமென்ன—மச்சான் மொதலியார் தான் டிக்கெட்டுங்க கொடுத்திருக்கராரே !

[இன்னொரு துண்டை யெடுத்து இரண்டாக்கிக் கொள்கிறான்; முகத்தைத் துடைத்துக் கொள்கிறான்]

**8-வது சிநேகிதர்** வருகிறார்.

8. சி. [தத்துவாயுடன்] ச ச ச........பாபதி—மொ...மொதிலியாரு—எங்கே யிருக்கிறாரு ?

ச. என்னடா எழுவாயிருக்குது!—இந்த தத்துவாயே கட்டிகினு அழுனும் போலே யிருக்கிதே !—இதுவும் வேஷமோ என்னமோ? இப்படி கேட்டு பாக்கலாம்—டிடிடி—டிக்கெட் எங்கே ?

8. சி. டிடிடி........க் கெட்டா எ.........ன்னுத்து—து! தூ! தூ!

[அவன் முகத்தில் துப்புகிறார்]

ச. ஐயா ! நீங்க டிக்கெட்டு கொடுக்காப்போனு போவுது மூஞ்சியிலே துப்பாதைங்க!—நீங்க மேலே போங்கள்.

[எட்டாவது சிநேகிதர் போகிறார்]

இன்னொரு டிக்கெட் கிழிச்சி வைச்சிகணும்,

[அப்படியே செய்கிறான்.]

9-வது சிநேகிதர் ஜோஸ்யராக வருகிறார்

9. சி. அப்பா ! கொஞ்சம் மேலே போகணும்.

ச. அதெல்லாம் டிக்கெட் இல்லாதே போவக்கூடாது.

9. சி. டிக்கெட் வாங்க என்கிட்ட பணமில்லேப்பா ! நான் ஒரு ஏழை ஜோஸ்யன் !

ச. பாவம் ! ஏழையாதான் இருக்கறுரு !—எனக்கு ஒரு நல்ல ஜோஸ்யம் சொல்லுங்க—பாக்கலாம்.

9. சி. என்ன ஜோஸ்யம் வேணும்.

ச. உம்—உம்—இப்பொ உங்களெ மேலே போவ உடப் போரனு இல்லேயா ?

9. சி. [யோசித்து] நீ உடமாட்டே ?

ச. உடமாட்டனு !—நான் உடரேன் இண்ணரே!—உங்க ஜோஸ்யம் தப்புதானே !

9. சி. இல்லேப்பா ! நீ உடமாட்டே !

ச. இல்லே ! நான் உடரேன்.

9. சி. உடமாட்டே அப்பா ! என் ஜோஸ்யம் தப்பாது !

ச. உங்க ஜோஸ்யம் தப்பு—உடரேன் !

[அவரை மெத்தைக்குப் பிடித்துத் தள்ளுகிறுன்.]

இந்த ஜோஸ்யருங்களெ யெல்லாம் நம்பாதே இண்ணு அப்பா சொல்லி யிருக்கிறுரு!—அடடெ! இவரே டிக்கெட் இல்லாதே மேலே அனுப்பிச்சூட்டனே !—ஆமா—இவருக்கும் கூட ஒரு டிக்கெட் கிழிச்சி வைச்சிகணும்!

[அப்படியே செய்கிறுன்.]

10 வது சிநேகிதர் (செவிடனுக) வருகிறுர்.

ச, ஐயா ! ஐயா ! கொஞ்சம் நில்லுங்க !-எங்கே உங்க டிக்கெட் ?

10. சி. நானு ?—நாராயணசாமி பிள்ளை?

ச. உங்க பேரெ கேக்கலே!—உங்க டிக்கெட் எங்கே ?

10. சி. என் ஊரா ?—பொயிலே மாதாவரம்!—

ச. என்னடா எழவு—செவிடு போலே யிருக்குதே !—[உரக்க] உங்க டிக்கெட் எங்கே ? டிக்கெட் எங்கே ?

10. சி. நான் டிராம்லே வல்லே அப்பா ?

ச. டிராம் டிக்கட் அல்லா !–மேலே போவ டிக்கெட்.

10. சி. றெயில் டிக்கெட் எனக்கென்னுத்துக்கு ?

ச. [உரக்க] றெயில் டிக்கெட் அல்லா ! மேலே போவ ! மேலே போவ !

10. சி. எயிரே பிளேன்லேயா ?

ச. அப்பா !–செவிட்டே கட்டிகினு அழரது என் தொண்டையெல்லாம் போவுது!–ஐயா, நீங்க மேலே போங்க! —உங்களுக்காக நான் ஒரு டிக்கெட் கிழிச்சி வைச்சிகிறேன் !

[அப்படியே செய்கிருன், பத்தாவது சிநேகிதர் மேலே போகிருர்.]

**பதினொன்ருவது சிநேகிதர்** *விரைவில் மேலே போகப் பார்க்கிருர்*

ச. [அவரைத் தடுத்து] எங்கே ரொம்ப அவசரமா போரைங்க ?

11. சி. மேலே ?

ச. கொஞ்சம் இப்படி இறங்கி வாங்க சொல்ரேன்–எங்கே உங்க டிக்கெட் ?

11. சி. இந்தா!— [ஒவ்வொரு ஜேபியாகத் தேடிப்பார்க்கிருர்] அடடே! அத்தே ஊட்டுலே வைச்சிட்டோம் !—நான் அப்புறம் கொண்டாந்து கொடுக்கரேன் !

ச. அதெல்லாம் உதவாது !-அப்புறம் நீங்க டும்கி கொடுத்தைங்கண்ணு !

11. சி. இல்லேப்பா—என் வார்த்தையே நப்பு ; நாளைக்கு உனக்கு ஒரு டிக்கெட் கொண்டாந்து காம்பிக்கரேன் !

ச. உங்களை நான் என்னமா நம்பரது ?

11. சி. என் பெயர் அமிர்தலிங்கம்பிள்ளை தெரியாது உனக்கு

ச. எங்கே யிருக்கிறது ?

11. சி. மூட்டை தூக்கி முத்தையா முதலியார் தெருவிலிருக்கிறது.

ச. நம்பர்

11. சி. லெவன்டி லெவன் அண்ட் செவன்டி செவன் Eleventy eleven and seventy seven)

ச. அத்தே ஒரு காய்தத்துலே எழுதிகொடுங்க.

[அப்படியே செய்கிறர்.]

சரிதான்—உங்களுக்கு என்ன வேலே ?

11. சி. நான் ரசவாதி.

ச. ரசவாந்தி இண்ணு ? ரசத்தெ சாப்பிட்டுட்டு —வாந்தியெடுக்கரவரா என்னு ?

11. சி. அப்படி யல்லாப்பா'—நான் ரசவாதம் செய்கிறவன்—செம்பையெல்லாம் பொன்னுக்குவேன்.

ச. அடடா! அப்படியா ஆனுல்—இந்த பைசாவே-பொன்னுக்குங்க பாக்கலாம்.

11. சி. அப்படியே! [அலந்தவாங்கி அதில் ஒரு சிட்டிகை பொடியை அதன் பெரில் வைத்து]

—கண்ணே நன்ருய் திறந்து பார்—

(அதை ஊதுகிருர் ; பொடி சபாபதி கண்களில் விழ)

ச. ஐஐயோ !-பொடி ! பொடி !

(கண்களைத் துடைத்துக் கொண்டிருக்கும் பொழுது. பதினெராம் சிநேகிதர் மேலே போய்விடுகிருர்)

[கண்களைத் துடைத்துக்கொண்டு] அடடே !— என் பைசா கூட மேலே பூட்டுதையா !—உம்—இன்னெரு டிக்கெட் கிழிச்சிக்கனும்—அடடா ! டிக்கெட்டு எல்லாம் ரொம்ப சின்னதா பூடுதே!—

12-வது சிநேகிதர் வருகிருர்.

12. சி. மொதலியார் Fancy dress party கொடுக்கிருராமே, எங்கே அப்பா ?

ச. இங்கே தான்—அத்தெ யேன் கேக்கரைங்க ?

12, சி. அங்கே கொஞ்சம் பேருக்கு வேஷம் போட என்னெ வரச்சொன்னுரு.

ச. அது சரிதான்! ஒரு வேளெ நீங்களே வேஷம் போட்டுகினு வந்தா ! எனக்கென்னமா தெரியரது?-உங்க டிக்கெட் எங்கே ?

12. **சி.** டிக்கெட்டா? எனக்கென்னத்துக்கப்பா டிக்கெட்? நான் கருணை விலாச சபையிலே வேஷம் போடரது உனக்குத் தெரியாது?

**ச.** அதெல்லாம் எனக்குத் தெரியாது—எனக்கு கொஞ்சம் வேஷம் போடுங்க முன்னே பாக்கலாம்.

12. **சி.** உனக்கென்ன வேஷம் போடணும்.

**ச.** ராஜா வேஷம் போடுங்க!

12. **சி.** பத்ராசலம் ராஜாவேஷம் போடரேன் உனக்கு—இப்படி உக்கார்—கண்ணெ மூடிகோ—கண்லே பௌடர் படப் போவுது.

(முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி வைத்து பெரிய நாமம் போடுகிருர்; பிறகு மெல்ல மெத்தைக்குப் போய் விடுகிருர் போகும் போது)

இப்போ கண்ணெ தெறந்துபார்! [போய்விடுகிருர்.]

**ச.** [கண்ணைத் திறந்து]—ஓ! இவரும் வேஷம் தான்!—சரி இன்னொரு டிக்கெட். [கிழித்துக்கொண்டு] அடே! போகும் போது மூஞ்சியிலே என்னமோ பூசிட்டு பூட்டாருடா! [கண்ணுடியில் பார்த்து]—ஓ! சரிதான் பெரிய நாமம் போட்டார்! அப்பா பாத்தா கோவிச்சிகும்— [கலைத்து விடுகிருன்]

*13*-**வது சிநேகிதர்** குடித்துவிட்டுத் தள்ளாடுவது போல் வருகிருர்.

**ச.** ஏய்! எங்கே போரைங்கையா?

13. **சி.** லோபலோ—போதானு.

**ச.** எங்கே டிக்கெட்?

13. **சி.** லோபலோ, போவாலெ! டிக்கெட் ஏமி!

**ச.** இதென்னடா பாஷையாயிருக்குது? லபோ லபோ இண்ணு கத்தராரு

13. சி. லோபலோ போயெதானிகி திக்கெட்டு எந்துகு! [எப்பம் விடுகிருர்]

**ச.** ஐஐயோ! நீங்க போங்கையா? உங்களுக்கும் ஒரு டிக்கெட் கிழிச்சி வைச்சிருக்கிறேன்!

13-வது சிநேகிதர் மேலே போகிறார்.]

இல்லாப்போனா நம்ப மேலேவாந்தி எடுப்பார்போலெயிருக்குது !

*14-வது சிநேகிதர் ஒரு கான்ஸ்டெபிலாக வருகிறார்.*

14. சி. யாராப்பா இங்கே சபாபதி !

ச. [பயந்து] நான்தானுங்க.

14. சி. வாஸ்டேஷனுக்கு !

ச. என்னாத்துக்குங்க!

14. சி. பேசாதே வர்ரையா வெலங்கு போட்டு இழுத்துகினு போவணுமா?

ச. நானு என்னா தப்பிதம் செய்தனுங்க?

14. சி. தப்புநோட் மாற்றப் பிரயத்னப்பட்டதாக உம்பேரில் கேஸ் வந்திருக்குது !

ச. அது என் நோட்டல்லாங்க, மெத்தெ மேலே போயிருக்கிறாரு, ஒருத்தர், அவர் கொண்டு வந்து கொடுத்தாருங்க.

14. சி. உன்னை நம்புவதெப்படி ? காட்டு அவரை.

ச. இதோ வாங்க—நான் காட்டரேன் !—நான் தப்பு மாத்திரம் செய்யமாட்டேனுங்க!

(மேலே அழைத்துக்கொண்டு போகிறான் ; அச்சமயம் 14 ஆவது சிநேகிதர் கண் சைகைசெய்ய, சற்று தூரத்திலிருந்த ஐந்தாறு சிநேகிதர்களும் மேலே போகிறார்கள்; மெத்தையின் பேரில் பெரும் நகைப்பு)

**சபாபதி முதலியார்,** சபாபதியின் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு வருகிறார்.

ச. மு. ஏண்டா ! ஒருத்தரையும் டிக்கெட் இல்லாதே மேலே உடத்தேவலே இண்ணு உனக்கு உத்தரவு பண்ணியிருந்தா—இத்தனி பேரெ—டிக்கெட் இல்லாமே உடரையா?

ச. இல்லெப்பா! டிக்கெட் இருக்குதப்பா! டிக்கெட் இருக்குதுப்பா !

ச. மு. எங்கேயடா டிக்கெட்டுங்க ?

ச. இதோ காட்டரேம்பா !

(ஜேபியிலிருந்து துண்டு காகிதங்களை யெல்லாம் எடுத்துக் கொடுக்கிறான்.)

ச. மு. இதென்ன ? டிக்கெட்டுங்களா இது ?

ச. மச்சான் மொதலியார்தாம்பா கொடுத்தாரு.

கி. மு. நான் விசாரிக்கரேன் இருங்க அந்தான் !—ஏண்டாப்பா? நான் ஒரு டிக்கெட்தானே கொடுத்தேன் ! இத்தனை பெயரை என்னமா விட்டாய் ?

ச. அத்தெ எண்ணிபாருங்க !

கி. மு. ஓ ! அதைக் துண்டு துண்டாகிழித்துக் கொண்டான்— [அவைகளை எண்ணிப்பார்த்து]

ஆமாண்டாப்பா — எட்டு டிக்கெட்தானிருக்கிறது. இப்பொ பதினன்கு பதினைந்து பெயரை விட்டிருக்கிருயே ?

ச. எத்தனை பெயர் இருக்கிராங்களோ அத்தனி டிக்கெட் கிழிச்சிகிங்கோ ! [எல்லோரும் நகைக்கிருர்கள்.]

ச. மு. இந்த தடியனைக் கட்டிக்கொண்டு என்ன செய்கிறது !

ச. என்னப்பா, எனக்கு பட்டப்பேர் கொடுக்கிறேனுண்ணாட்டு தடியன் இண்ரையே ?

ச. மு. ஆமாம் ! பட்டப் பெயர் கொடுக்கரேன் !—அசாத்திய ராமகோடிசூர மொத்து கட்டை தடியன்! இண்ணு !

ச. அப்பா, அந்தப் பட்டம் ரொம்ப பெரிசா யிருக்குதப்பா, அதுலே பாதி எனக்குக் கொடுத்தூடப்பா, பாதியே நீ எடுத்துகோப்பா !

ச, மு. வாயை மூடு அதனப் பிரசங்கி !

கி. மு. இல்லே அத்தான், அவன் சொல்ரதும் ஒரு விதத்துலே சரியாதான் இருக்குது. நீங்க அவனுக்கு டிக்கெட் இப்படி யிருக்கணும் இண்ணு சொன்னீங்களா ?

ச. மு. வாஸ்தவம் தாம்பெ!—நீ சொல்ரதும் சரியாதான் இருக்குது !—என் பேர்லேயும் தப்புதான் !

காட்சி முடிகிறது.

பிரஹசனம் முடிகிறது.

# சோம்பேறி சகுனம் பார்த்தது

நாடக பாத்திரங்கள்

விஸ்வ கர்ணன்.
அவனது மனைவி.
அசல் ஆத்துப் பிள்ளை.

## முதல் அங்கம்

### முதற் காட்சி

இடம்—விஸ்வகர்ணன் வீட்டில் ஓர் அறை

காலம்—அதிகாலை

*படுக்கையினின்றும் கண்களை நிமிட்டிக்கொண்டு* **விஸ்வகர்ணன்** *எழுந்திருக்கிறான்.*

**வி.** காலையிலே எழுந்திருந்தால் இந்தக் கழுதை முண்டை முகத்தில் முழிக்க வேண்டியதாயிருக்கிறது—எங்கே, காணோம் அவள்?—எப்படியும் இன்றைக்காவது கர்ண மகாராஜாவிடம் போகும்படி என்னை நிர்ப்பந்திப் பாள்—அதற்கு ஏதாவது புதுசாகச் சொல்ல வேண் டும்—போக்கு!

**விஸ்வகர்ணன் மனைவி** *திடீரென்று வருகிறாள்.*

**வி. ம.** புதுசா—போக்கா சொல்லப் போறீர்? யார்கிட்ட?

**வி.** சேச்சே! உன்கிட்டவல்ல!—நான் என்ன சொன் னேன் என்றால், தற்காலம் போய் யாசகம் கேட்டா லும் ஏதாவது புதுசா—சொல்ரா—போக்கு—இண் ணேன்.

**வி. ம.** உம்—பத்திரம், பயமிருக்கட்டும்–அது போனால் போகி றது. வேறெ யார் போக்கு சொன்னாலும் கர்ணமஹா ராஜா மாத்திரம் உமக்கு ஒன்றும் போக்கு சொல்ல மாட்டார்—இன்னைக்கி எப்படியாவது அவர்கிட்ட போயி—ஏதாவது வாங்கிகிண்டு வாரும்.

**வி.** இண்ணைக்கா போச்சொல்ரே ?

**வி. ம.** ஆமாமாம்! இண்ணைக்கி கட்டாயமாய்ப் போய்த்தான் தீர வேண்டும்.

**வி.** இல்லே—என் உடம்பு—ஏதோ கொஞ்சம் அசௌகர்ய மாயிருக்குதே இண்ணு பாக்கிறேன்.

**வி. ம.** இந்தக்கதை யெல்லாம் நேக்கு நன்ளு தெரியும், உம்ம உடம்புக்கு ஒன்னுமில்லே — நன்ளுதா கழுக்கு மொழுக்கு இண்ணு இருக்கிறீரே !—என்ன ஓமக்கு உடம்பு ?

**வி.** வயத்துலே—ஏதோ—கொஞ்சம் அஜீரணமாயிருக்குது—போலே—தோணுது.

**வி. ம.** அப்படியா ! அதற்கு நான் ஒரு மருந்து சொல்றேன் கேளும். இந்த இரண்டு காததூரம் நடந்து போய் வந்தா அந்த அஜீர்ணமெல்லாம் சரியாப் பூடும்.

**வி.** இல்லேடி—எனக்கு—எழுந்திருக்கவே முடியலேயே—கை காலெல்லாம் அப்படியே புடிச்சிண்டிருக்கு.

**வி. ம.** ஆனல்—கொஞ்சம் பொறும் —சூாத்து நில ஆவாரையும் இந்துப்பும் கஷாயம் போட்டிண்டு வரேன் ; அதுலே ஒரு ஓழக்கு சாப்பிடும்—இந்த கை கால் பிடிப்பெல்லாம் பறந்து போம்,

**வி.** ஐஐயோ! வேணுண்டி—இதோ நான் புறப்பட்டுடறேன்.

[எழுந்திருக்கிருன்.]

ஆமாம்—இண்ணைக்கி திங்கட்கிழமை ஆச்சே ! 7½ மணிக்கெல்லாம் ராகு காலம் வந்து விடுமே ?

**வி. ம.** அதற்காகத்தான் இப்பொழுதே புறப்பட்டு விடும்—ராகு காலம் வர்ரத்துக்கு முன்னயே.

**வி.** ஆமாம்—இந்த பஞ்சாங்கத்தை பார்க்கிறேன்—நாள் நன்ருயிருக்கிறதா யென்று—அதுவும் கர்ணமகாராஜர் விடம் போகிறது— [ஓர் ஓலைக்கட்டைப் பிரித்து பார்க்கிருன்,]

—ஐஐயோ! ஏனடி ? என்னைச் சாகவா சொல்கிருய் ?

இன்றைக்கு மரணயோகமாயிருக்குதே !— நான் வீட்டை விட்டு புறப்படவே மாட்டேன் !

[உட்கார்ந்து விடுகிருன்.]

**வி. ம.** இதேது பஞ்சாஙகம் ? இந்தப் புது வருஷத்திய பஞ்சாங்கம் நம்ப ஆத்து வாத்தியார் கணிச்சி கொடுக்கலேயே இன்னும்!—காட்டும் பார்க்கலாம் !

[அதை எடுத்துப் பார்த்து]

ஓ!—இது போன வருஷத்து பஞ்சாங்கமன்ஞே ?—ஓய்! பிராம்மணு ! பொறப்படாமே யிருக்கிறத்துக்கு ஏதாவது சாக்கு ஆப்பிடுமிண்ணு பாத்தீரோ ?—இண்ணைக்கி நல்ல அமிர்தயோகம்! பக்கத்து தெரு கிருஷ்ண வேணிக்கு இன்னைக்கி சீமந்தம் ; அவாள் நல்ல நாளா தான் பாத்து வைச்சிருப்பா—அவளுடைய மாமஞர் ஜோஸ்யர் ! நீர் புறப்படும் ! புறப்படும் ?

**வி.** சரி! எப்படியாவது புறப்படவேண்டுமென்கிருய் ? நேக்கு ஒண்ணும் ஆட்சேபனையில்லே, என் மனசிலே இருக்கிதே சொல்லிவிட்ரேன். இண்ணைக்கி புறப்பட்டுப்போய் கேட்டால் ஒண்ணும் கிடைக்காது இண்ணு எனக்குள்ளே ஏதோ தோணுது. இதிலெல்லாம் என் மனசுலே எப்படி படுமோ அப்படிதான் நடக்கிறது என் கிறது என் அனுபவம்—ஆகவே—

**வி. ம.** இண்ணைக்கி புறப்பட்டு போனல் நல்ல சன்மானம் கிடைக்கும் என்று என் மனசுலே படுது. என் மனசுலே படரது எப்பவும் தப்பினதில்லே. ஆகவே—நீர் கட்டாயமாய் புறப்படத்தான் வேண்டும்.

**வி.** சரி ! உன் இஷ்டம் !—இப்பவே சொல்லிவிட்டேன் ஒண்ணும் கிடைக்காப்போகு—அப்புறம் என் பேரில் கோவிச்சிக்கக் கூடாது.

**வி. ம.** அந்தக் கதையெல்லாம் உதவாது ! இப்பவே சொல்லிவிட்டேன். நீர் மூன்ருவது தெருத்திண்ணையின் பேரில் படுத்துக் தூங்கிவிட்டு, சாயங்காலம் திரும்பி வந்து, கர்ண மகாராஜாவை காண முடியலே என்று சொல்லப் போரீர் பத்திரம்! இன்னைக்கு சாயங்காலத்திற்குள்

ஏதாவது கொண்டு வந்தாலாச்சு, இல்லா விட்டால் உம்மெ வெளியே தள்ளி தெருக்கதவே தாப்பாள் போட்டுண்டுடுவேன் !

வி. சரி—ஆனுகே–இதோ புறப்படரேன்–ஏதாவது கட்டு சோறு இருந்தா கட்டிகொடு வழிக்கு.

வி. ம. கட்டுசோறு ?—அடுப்பெ மூட்டி ரெண்டு நாளாச்சு ! கட்டு சோத்துக்கு எங்கே போரது ?

வி. ரெண்டு வெத்திலே பாக்காவது கொண்டாயேன் ?

[அதைக்கொண்டுவர அறைக்குள் அவனது மனைவி போக, அவளறியாதபடி மூக்கில் கொஞ்சம் நஸ்யம் போட்டுக்கொண்டு நான்கு தும்மலைத் தும்புகிறுன்]

வி. ம. இந்தாரும் வெத்திலைபாக்கு.

வி. அடி ! பாத்தையா ! புறப்படப் போகும்போது தும்பல் வந்தது. "தும்பலில் புறப்பட்டக்கால் துன்பமே விளைந்திடுமன்றே" என்று பெரியவாள் சொல்லி யிருக்கா? நான் இண்ணைக்கு புறப்படவே மாட்டேன்! பிறகு ஏதாவது எனக்கு கெடுதி நேரிட்டால் நீ என்ன செய்வாய் ! அதை நினைத்தாலும் எனக்கு துக்கம் மேலிடுகிறது !—நீ மொட்டை யடிச்சிண்டு மூலையிலே உக்காந்திண்டு இருக்கிறதே பார்த்து நான் சகிக்கமாட்டேன் ! [அழுவது போல் பாசாங்கு செய்கிறுன்.]

வி. ம. ஓய் ! பிராம்மணு ! நீர் ஏதாவது நாடக மாடக் கத்திண்டிருக்கிறீரா என்ன ?-வாஸ்தவமா கண்லே ஜலம் கூட வந்துட்டுதே !—அதெல்லாம் அப்படி ஒன்றும் நேராது, நேர்ந்தாலும் அதை நீர் பார்க்க மாட்டீர் ! துக்கப்படாதீர்–கண்ணைத் துடைச்சிண்டு புறப்படும்.

வி. உம்—புறப்படுகிறேன் !

[வெறுப்புடன் புறப்படுகிறுன்; வேண்டுமென்று வாசற் கதவு தடுக்கி விழுகிறுன்,

பார்த்தாயாடி ! இந்த சகுனங்களிலெல்லாம் என்ன இருக்கு இண்ணையே! தும்பல் வந்ததற்கு சரியாக இப்பொழுது, கால் தடுக்கி விழுந்தேன் பார் !

**வி. ம.** ஆமாம்! வேண்டுமென்று!—இந்த ஜித்தெல்லாம் நேக்கு நன்றாதெரியும்!—இதிலெல்லாம் ஏமாற மாட்டேன்—புறப்படும்!

**வி.** உன் மனசுதான் என்ன கல்லோ!—ஹூம்—புறப்படுகிறேன்! [கதவைத் தாண்டி போகிருன்.]

**வி. ம.** அப்பா! புறப்பட்டார் பிராமணன்!

**விஸ்வகர்ணன்** திரும்பி விரைந்து வருகிருன்.

இதென்ன விந்தை! புறப்பட்டார் என்று சொல்லி வாயை மூடு முன்னே திரும்பி வந்தூட்டீரே!

**வி.** இல்லேடி! நீ பாக்கலேயோ? அடுத்தாத்து பூனேக்குட்டி குறுக்கே வந்தது! பூனே குறுக்கிட்டால் புறப்படலாமோ? நோக்கு தெரியாதோ? [உட்காருகிருன்.]

**வி. ம.** அதெல்லாம் தெரியும் சரிதான்—அடுத்தாத்துலே பூனெ குட்டி யேது? அந்தப்பய நாய் குட்டியல்லவோ வளக்கருன்.

**வி.** இல்லே பூனே குட்டிதான்.

**வி. ம.** இருக்கட்டும்—எப்படி போச்சுது அது?

**வி.** வலது பக்கமிருந்து இடது பக்கம் போச்சுது.

**வி. ம.** ரொம்ப சந்தோஷம்—ஆனால் மிகவும் சுபம்—நீர் புறப்படும் உடனே. வேண்டுமானால் நீரே பஞ்சாங்கத்தில் பாரும்.

**வி.** [அதைப் பார்த்து] உம்! ஓவ்வொன்றிற்கும் ஏதாவது பதில் சொல்லிவிடு!—ஈஸ்வரா! ஈஸ்வரா!

**வி. ம.** பகுதான்யா! பகுதான்யா!—புறப்புடுகிறீரா என்ன?

**வி.** இதோ புறப்பட்டு விட்டேன்.

[வாசற்படியண்டை போகிருன்.]

அடி! அடி! இப்படிவா! நான் சொன்னு, நான் ஏதோ சாக்கு சொல்ரதாக நினேக்கிறே! அதோ நீயே பார்!—ஒத்தைப் பிராம்மணன் எதிர்லே வர்ரான்!

**வி: ம.** ஏதோ பார்க்கலாம் !— [வெளியிற் பார்த்து]
ஆஹா !—நம்ம பக்கத்து ஆத்து பயதான் ! அவனுக்கு இன்னும் பூணூல் ஆகலே! அத்தொட்டு அவன் பிராம்மணனோடு சேர்க்கையில்லே ! புறப்படும்.

பக்கத்து ஆத்து **பிராம்மணப் பிள்ளை** வருகிறான்.

**பி.** அத்திம்பேர் !—எங்கே பொறப்படறீர் ?

**வி.** கேட்டையாடி அவன் சொன்னதை ! புறப்படும் போது எங்கே போறீர் இண்ணு கேக்கலாமா ? நீ என்ன வேண்டுமென்றாலும் கோவிச்சிக்கோ—நான் புறப்படவே மாட்டேன் ! [உட்கார்ந்து கொண்டு] அடே பையா எங்கே இப்படி வந்தே ?

**பி.** இல்லே அத்திம்பேர், எங்க சித்தப்பா இண்ணைக்கு கர்ண மகாராஜாகிட்ட தானம் வாங்கி வர புறப்பட்டார்—நீங்களும் புறப்படலையா இண்ணு கேக்க வந்தேன்.

**வி.** ஏண்டாப்பா ! ஒனக்கும் நான் வீட்டிலே இருக்கிறது சகிக்கலையோ ?

**வி. ம.** உம் !—அவன் பேர்லே கோவிச்சிக்காதைங்கோ !—அவன் உமக்கு நல்லதுதானே சொல்லவந்தான் !—புறப்படும் இனி தாமதிக்காதீர்.

**வி.** சரி! ஓர்த்தருக்கு ரெண்டு பேராச்சி!—புறபடவேண்டியது தான் ! [எழுந்திருக்கிறான் ; வாயிலில் மழை தூறுகிறது.]

பார்த்தையாடி ! மழை பெய்கிறது ! தும்பலிலே புறப்பட்டாலும் தூத்தலிலே புறப்படக்கூடாது இண்ணு நீ கேட்டதில்லையோ ?

**பி.** அத்திம்பேர், அத்திம்பேர், எங்க ஆத்துலே ஒரு நல்ல கொடை யிருக்குது. ஓடிப்போய் அத்தெ கொண்டாரேன்! [ஓடிப்போகிறான்.]

**வி. ம.** ஓய்! பிராம்மணா! ஓமக்கிண்ணு இந்த மழெ ஓண்ணு வந்ததே!—ஆனாலும் பரவாயில்லே.—அது நின்னு போச்சு புறப்படும்.

**வி.** உம்—மறுபடியும் வந்தா ?

**வி. ம.** மறுபடியும் வந்தா—அந்தப் பய கொடெ கொண்டு வருவான், அத்தெ வாங்கிண்டு போய் வாரும்.

**வி.** சரி—உன் இஷ்டம்—

[புறப்பட்டு வாயிலில் வெளியிற் பார்த்து]

அடி! இப்படி கொஞ்சம் வா! சும்மா கோவிச்சிகாதே! நான் புறப்படும் போது எதிரில் வெள்ளெ பொடவே கட்டிண்டு ஒரு கம்மிஞட்டி வர்ரா பார்.

**வி. ம.** ஏதோ பார்ப்போம் ! [வெளியிற் பார்த்து]

கம்மிஞட்டியா அவள்! நல்ல கட்டு கழுத்தி! சூத்திரச்சி—அவாளெல்லாம் வெள்ளெ பொடவெ சாதாரணமா உடுத்திக்கிவாள்-கழுத்திலே தாலி யிருக்குது கண்ணெ திறந்து பாரும்.

**வி.** ஆமாம்—ஆனுல் அவள் தலையிலே எண்ணெய் கொடத்தைத் தூக்கிகிண்டு வர்ராளெ !

[வெளியில் குரல்] தயிர் வாங்கலையோ தயிர் !

**வி. ம.** கேட்டீரா ! பிராம்மணு! தயிர் விற்கிருள் ! எண்ணெயல்லா! தயிர் பானை வந்தால் நல்ல சகுனம், புறப்படும் !—இப்போ-பொறப்படறீரா ? இல்லவிட்டால் வெளியில் தொரத்தி கதவைச் சாத்தட்டுமா ?

[நெருங்குகிருள்.]

**வி.** வேண்டாமடி! வேண்டாமடி! நானுகப் போகிறேன்.

[போகிருன்.]

**வி. ம.** ஏதாவது போக்கு சொல்லி வந்தீரா பாரும்.

[கதவைத் தாளிடுகிருள்]

கர்ணனுக்கப்புறம் கொடையில்லை யென்று சொல்கிருர்களே என்று சொல்லி, அவரிடம் போய் ஏதாவது தானம் வாங்கிண்டு வாரும் இன்னு தினம் சொல்லிண்டிருந்தா, தினம் ஏதாவது போக்கு சொல்லிண்டிருப்பாரா இந்த பிராம்மணன்! அம்மட்டும் இன்றைக்

காவது வெளிப் படுத்திஞேமே —

[வெளியில் விஸ்வகர்ணன் கதவை தட்டுகிருன்]

யார் அது வெளியே ?

**வி.** நான் தாண்டி—கதவைதிற !

**வி. ம.** நான் திறக்கவே மாட்டேன்! நீர் என்ன சாக்கு சொன்னுலும் கேக்கமாட்டேன் !

**வி.** இல்லேடி!–நான் சாக்கு சொல்லலியே!–என்னெ என்ஞத்துக்கு போகச் சொன்னே—அத்தெ மறந்து பூட்டேன். அத்தெ கேட்டுகினு போலாமின்னு வந்தேன் !

**வி. ம.** அடே! பிராமணு! இப்படியும் ஒரு ஜென்மம் இருக்குமா !-[உரக்க] உம்மெ கர்ணமாகராஜாவிடம் போய் உம் தரித்திரம் நீங்க ஏதாவது தானம் வாங்கிவர அனுப்பினேன் !

**வி.** ஓ ! சரி ! சரி !—நான் வர்ரேன்!

**வி. மு.** [உரக்க] ஏதாவது வாங்கிகினு வந்தா ஆத்துக்கு வாரும் —வெறுங்கையோடு ஏதாவது சாக்கு சொல்லிக் கொண்டு வந்தீரா ! நான் மிகவும் கெட்டவளாயிருப்பேன் ! பத்திரம் !

**வி.** [வெளியில்] இல்லே இல்லே ! ஆகட்டும் ! ஆகட்டும் !

**காட்சி முடிகிறது.**

**பிரஹசனம் முடிகிறது.**

# கண்டவுடன் காதல்

### நாடக பாத்திரங்கள்

**ராஜீவாட்சி** ... ... ஆண் வேடத்திலிருக்கும் ஓர் ராஜகுமாரி.

**சுசீலா** .... ... அவளது சிறிய தகப்பனாரின் பெண்.

**ரகுவீரன்** ... .... ராஜீவாட்சியின் காதலனுடைய தமயன்.

**இடம்**—அருங்காடு

## முதல் அங்கம்

### முதற் காட்சி

**இடம்**—அருங்காட்டில் ஒரு குடிசைக்கெதிர்.

**காலம்**—பகல்.

**சுசீலாவும், ரகுவீரனும்** வருகிறார்கள்.

**சு.** ஐயா, உமக்கு மிகவும் சிரமம் கொடுத்தேன், மன்னிக்க வேண்டும்.

**ர.** சிரமமாவது? சிரமம் என்பது இப்படியிருப்பதானால் உலகத்தில் எல்லோரும் சிரமத்தை யன்றோ விரும்புவார்கள்—நான் வருகிறேன், உன் தங்கையை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்.

**சு.** அப்படியே ஆகட்டும்—உம்—தங்கையாவது! என்ன இன்னும் அப்படியே ஏளனம் செய்கின்றீரே!—அல்லது ஏதாவது உண்மையில் மதிமயங்கி இருக்கின்றீரா?

**ர.** அப்படியே எண்ணிக்கொள், ஒரு ஆடவனை "ராஜீவாட்சி" என்று அமரசிம்மன் அழைக்கவில்லையா?

அப்படியே நானும் உன் தம்பியை தங்கை யென்றழைப்பதாக நினை.

சு. சரி ! நீர் ஏதோ சந்தேகிக்கின்றீர் ! அப்படி யொன்றுமில்லை. அவன் என் தம்பி தான்.

ர. சந்தேகமென்ன அதற்கு !—அவள் உன் தம்பிதான் !

சு. ஐயோ ! சாமி ! நீர் ஏளனம் செய்ததில் எனக்கும் வாய் தவறி அப்படியே வந்து விட்டது. இதென்ன விந்தை ! யாராவது பெண்ணாய்ப் பிறந்து ஆணுருவம் தரிப்பார்களா ? தரித்தாலும் உலகத்தவர் ஒரு நொடியிற் கண்டு பிடித்து விடமாட்டார்களா ?

ர. அது எங்ஙனமாயினுமாகுக !—நீயாவது பெண்ணாய்ப் பிறந்திருக்கின்றாயே ?

சு. ஏன் ?—பிறந்தாலென்ன ?

ர. ஒன்றுமில்லை—அதுயாருடைய பாக்கியமோ என்று கூற வந்தேன்.

சு. யாருடைய பாக்கியமாவது ! என் துர்பாக்கியமேயாம். பெண்ணாய்ப் பிறப்பதினும் பெருங்கேடுண்டோ இப் பேருலகில் ? ஜெகதீசன் தான் இப்படி விதித்தாரே எங்கள் தலையில் !

ர. ஐயோ ! அவ்வாறு ஒரு காலு மெண்ணலாகாது! ஜெகதீசனை வீணில் தூஷிக்கலாகாது! கெடுதியாகத் தோன்றும் ஒவ்வொரு விஷயமும் முடிவில் நமக்கு நன்மையைப் பயப்பதாயிருக்கலாம். அதற் கென்னினும் உறுதியொன்றுண்டோ ? உடன் பிறந்த உத்தமனைக் கொல்லவேண்டு மென்கிற உன்மத்த குணத்துடன் வந்தேன் இக் கானகம் அதினும் கெடுதி யொன்றுண்டோ இக் குவலயத்தில் ? ஆயினும் அரன் செயலைப் பார். அங்ஙனம் வந்ததனாலன்றோ, கொல்ல வந்த கொடியோனென்ன வறிந்தும், கடும்பாம்பினின்றும் கொடுஞ் சிங்கத்தினின்றும், தன்னுயிரை ஆனியிற் படுத்தித் தன்னுடன் பிறந்தானெனக் காத்தருளிய என் தம்பியின் தயாள குணத்தைக் கண்டேன் ! அதனாலன்றோ இது வரையில் என்னைப் பற்றியிருந்த தீய குணத்தை திட்டென விடுத்தேன். அம்மாத்திரமோ? இக்கானகத்திடை வந்ததனாலன்றோ நாட்டின்

கண் எந்நாட்களை யெல்லாம் கழித்தாலும் எனக்குக் கிடைத்தற்கரிய பேறு கிடைத்தது !

சு. அது என்ன அப்படிப்பட்ட பேறு ?

ர. உன்னைக் காணப் பெற்றேன் !—

சு. உமக்கு நேரமாகவில்லையா ? இருப்பிடம் போக வந்து

ர. என்னைப்பார்த்து என்னுடன் வார்த்தையாடு — உனக்குக் கஷ்ட மாயிந்தால் இதோ போகிறேன்.

சு. ஐயே ! அப்படியொன்றுமில்லை. எனக்கொன்றும் வருத்த மில்லை. ஆயினும் முன்பே உமது தம்பியிடம் போக வேண்டுமென்று கூறினீரே என்று சொன்னேன் —ஏன் பெரு மூச்சு விடுகிறேன்.

ர. சுசீலா ! [அவளது கரத்தைப்பற்றி]

**ராஜீவாட்சி** குடிகைக்கு உள்ளிருந்து "அக்காள் அக்காள் என்று அழைக்கிருள்.

சு. அதோ என் தம்பி அழைக்கின்ருன்.—விடும் என்னை.

ர. கண்ணே ! கண்ணே ! நான் சொல்வதைக்கேட்டு எனக்கு தக்க பதில் கூறு, விடுகிறேன். உன்னைக் கண்ட பிறகே காதல் என்பதின் திறத்தை யறிந்தேன். உன் காதலைப் பெறத்தகாத கடைப்பட்டவனுயினும் ஏதோ நான் கேட்கின்றேன். என் மீது கருணை கூர்ந்து கடாட்சித்தருள வேண்டும்—என்ன சொல்லுகின்ருய் !

சு. என் தம்பி காத்துக் கொண்டிருக்கின்ருன் !

[உள்ளே அக்காள் ! அக்காள் !]

ர. என்னை மணம் புரிவதாகச் சொல்—விடுகிறேன்.

சு. ஆகட்டும் !— [ரகுவீரன் அவளது கரத்தை விட அவள் சொஞ்சதூரம் வழி விட்டுவிட்டு பிறகு குடிசைக்குள் ஓடுகிருள். ரகுவீரன் சற்று குடிசைப்புறம் பார்த்துவிட்டுப் போகிருன்.]

சுசீலையும், ராஜீவாட்சியும் வருகிருர்கள்.

ரா. அக்காள், இந்நேரம் எங்கிருந்தாய் ?

சு. இங்குதான் இருந்தேன்.

ரா. இங்குதானிருந்தால் நான் இரண்டு முறை கூபிட்டப் தும், ஏன் கேட்காமற் போயிற்று உனக்கு ?

சு. அதுவா ?—அவரை—வீட்டுக்கு வழி காட்டி விட்டு வந்தேன்.

ரா. யாரை ?

சு. உம் !–யாரை !–அதேன் அப்படி கேட்கின்றாயென்னை?

ரா. இல்லை, அவர் என்றால் அவருக்கு ஒரு பெயரிருக்க வேண்டாமா என்று கேட்டேன்.

சு. என்னை ஏளனம் செய்கின்றாயா என்ன ! இங்கு வந்திருந்தது யார் ? வேறு யாரிருக்கப் போகின்றது ?

ரா. சரிதான் ?—நினைத்தேன் !—அவர் பெயரைச் சொல்லாக் கூடாதே நீ ?

சு. ஏனடி ? உனக்கென்ன ஏளனமாயிருக்கின்றதோ நான் சொல்வதெல்லாம் ?

ரா. பிறகு அவர் யார் சொல்லுகிறதற்கென்ன நீ ?

சு. யாரா ? உன் பிராணநாதருடைய அண்ணன் ! தெரிந்ததா !

ரா. உம் உம் !—சரிதான் !— கெட்டிக்காரி — யுக்தியாகச் சொல்கின்றாயே அது தான் சந்தோஷ மெனக்கு ! அவர் என் பிராணநாதருடைய அண்ணன் ! நீ எனக்கு அக்காள் ! அல்லவா ?

சு. இருந்தாலென்னடி ?

ரா. அப்பொழுது அவருக்கு நீ என்ன வேண்டும் ?

சு. சரி, உன்னோடு விளையாட முடியாதென்றால்.

[குடிசைக்குள் போகப்பார்க்கிறாள்.]

ரா. [அவளது கரத்தைப் பற்றி இழுத்து] அக்காள் ! அக்காள் !—அவ்வளவு கோபம் வேண்டாம்—வாஸ்தவம் தான்—இனி மேல் என்னோடு விளையாடுவாயா நீ?—அது இருக்கட்டும்—எவ்வளவு தூரம் அவரைக் கொண்டுபோய் வழி விட்டு வந்தாய் ?

சு. இந்த நீரோடை மட்டும்—என்னை ஏனடி இப்படி பார்க்கின்றாய் ?—என் கையை விடு.

ரா. ஒரு கேள்வி கேட்கின்றேன், அதற்கு பதில் கூறு விடுகின்றேன்.

சு. என்ன கேள்வி ?

ரா. என்னிடம் பொய் பேச எத்தனை காலமாகக் கற்றுக் கொண்டாய்

சு. என்ன பொய் பேசினேன் உன்னிடம் ?

ரா. சரி ! உன்னைக் கேட்கும் விதத்தில் கேட்கவேண்டும்—அது போனாற் போகின்றது ; வேறொரு கேள்வி கேட்கின்றேன் அதற்காவது தக்கபடி பதில் கூறுகின்றாயா?

சு. கேள்.—என் கையை விட்டுக்கேள்.

ரா. "என்னை மணம் புரிவதாகச் சொல்—விடுகின்றேன் !"—இப்பொழுது என்ன சொல்கின்றாய் ? ஏன் முகத்தைத் திருப்பிக்கொள்ளுகின்றாய் !—என்னைப்பார் ?—ஏதோ அவருக்கு பதில் சொன்ன மாதிரி சொல் பார்ப்போம் !—அங்கிருந்து பார்த்ததில் எனக்கு நன்றாய்த் தெரியவில்லை !—

சு. ராஜீவா ! ராஜீவா ! என் கண்ணல்ல நீ ! உன்னிடம் நான் உண்மையை ஒளிப்பேனா! நீ உடனே கேட்டதில் எனக்கின்னது கூறுவதென்று தோற்றாமற் போயது ? வெட்கமாயிருந்தது! என் மீது வருத்தம் வேண்டாம் இதில் ஒன்றுந் தவறில்லையே. இது உனக்கும் சம்மதந் தானே ? நீ தம்பியை விவாகம் செய்து கொண்டால் நான் தமையனை விவாகம் செய்து கொள்ளுகின்றேன். முறையும் சரிதானே ! தெய்வமே நமக்கு இப்படி வாய்க்கச் செய்தது என்றுஎண்ணுகிறேன்.

ரா. அதற்காகத்தான் நான் அப்பொழுதே என் பிராணநாதருடைய தமயன் என் அக்காளாகிய உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டேன் !

சு. ராஜீவா ! நம்மிருவருக்கும் ஒரே தினத்தில் விவாகம் நடந்தேறுமாயின் என்ன நன்ருயிருக்கும். இனியேன் இந்த ஆண்வேஷம் உனக்கு ?—உன் பிராணநாதரிடம் போய் நீ இன்னாரென உண்மையை வெளியிட்டு, மகாராஜாவிடத்தும் உண்மையைக் கூறி, இக்கானகத்திலேயே நம்மிருவருக்கும் விவாகம் நடக்கும்படி செய்கிறதுதானே ?

ரா. அவ்வளவு அவசரமென்ன ?

சு. ஒரு காரணமிருக்கின்றது. ரகுவீரர் நீ பெண்பால் என்று கொஞ்சம் சந்தேகப்படுகின்ருற் போலிருக்கின்றது. நான் அல்லவென்று பலமுறை கூறினேன். கூறியும் அவர் மனதில் ஏதோ சந்தேகம் கொண்டிருக்கிருர். ஆகவே அவர் மூலமாக உண்மை வெளியாகு முன், நீயாக உண்மையை வெளிப்படுத்திஞல் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன்.

ரா. அப்படியா ! ஆனால் நாம் முன் ஜாக்கிரதையா இருக்க வேண்டியதுதான். ஆனல்—நீ இங்குதானிருக்கின்ருயா ? உன் பிராணநாதரைப் பார்க்க வருகின்ருயா நீயும் ?

சு. போடி ! எப்பொழுது பார்த்தாலும் உனக்கு ஏளனம் தான் !

காட்சி முடிகிறது.